Regd. No. M. 4900. 16-பக்கங்கள். தனிப்பிரதி விலை 0-2-0.

நமது இயக்க அச்சு வேலைகள் அனைத்துக்கும் சிறந்த இடம் ★ தமிழன் பிரஸ், ஈரோடு.

குடி அரசு

நமது இயக்கப் புத்தகங்கள் அனைத்தும் கிடைக்குமிடம் ★ நாதன் கம்பெனி ஈரோடு.

வருட சந்தா உள்நாடு ரூ. 7-0-0. வெளிநாடு ரூ. 9-0-0.

மாலை 21 } ஈரோடு 17-4-1948 சனிக்கிழமை { மலர் 32.

வேண்டுகோள்!

பார்ப்பானைப் பிராமணன் என்று பகரவோ எழுதவோ வேண்டாம்!

★

பார்ப்பனர்கள் தம்மைப் 'பிராமணர்கள்' என்று கூறிக்கொண்டு 'பிராமணாள் ஓட்டல்' என்று போட்டுக்கொண்டு, நம்மைப் பஞ்சமன், சூத்திரன் என்ற வகுப்பில் குறிக்கும் ஹரிஜனன், நாயுடு, ரெட்டியார், முதலியார், பிள்ளை, ஆச்சாரி, செட்டியார், நாடார் முதலிய பெயர்களால் அழைத்தும், அழைத்துக்கொள்ளும்படி செய்தும் வருகிறார்கள். அதாவது பதிவு (ரிஜிஸ்டர்) ஆகும் ஆதாரங்களில் போட்டு ஆகவேண்டும் என்று கட்டாயப்படுத்துகிறார்கள். இன்று நடப்பில் இருக்கும் ஜாதிக்கும், வகுப்புக்கும் இதுதான் தத்துவமாக இருந்து வருகிறது.

பார்ப்பனர்கள் பிராமணர்கள் ஆனால் (பார்ப்பனர்கள் அல்லாத மற்ற "இந்து"க்கள் என்பவர்கள் ஆகிய) நாம் யார்? சூத்திரர்கள் என்பதாகத்தானே (நாமே ஒப்புக்கொண்டதாக) ஆகி விடுகிறது?

ஆதலால் பார்ப்பனர்களை நாம் பிராமணர்கள் என்று ஒப்புக்கொண்டதாகக் காட்டுவதோ அல்லது நாம் அவர்களை பிராமணர்கள் என்று அழைப்பதோ, சொல்வதோ, ஆதாரங்களில் எழுதுவதோ ஆகிய காரியங்கள் நம்மை நாமே இழிவு படுத்திக்கொள்வதாகவும் நமது கருத்துக்கும் ஆசைக்கும் முரணாக நடந்ததாகவும் ஆகிறது.

எனவே திராவிட கழக அங்கத்தினர்களும் ஆதரவாளர்களும் தங்களால் நடத்தப்படும் பத்திரிகைகள், எழுதப்படும் வியாசங்கள், புத்தகங்கள், கடிதங்கள் முதலியவற்றில் கண்டிப்பாகப் பார்ப்பனர் என்று குறிப்பிட வேண்டிய இடத்தில் பிராமணன், பிராமணர்கள் என்கின்ற வார்த்தைகள் விழாதபடி பார்த்துக்கொள்ள வேண்டுமாய் வேண்டிக்கொள்கிறேன்.

"பார்ப்பானை அய்யர் என்ற காலமும் போச்சே" என்று பாரதியார் என்ற ஒரு பார்ப்பனரே பாடியிருக்கிறார். அந்தப் புத்தகம் பார்ப்பனர்களால், காங்கரசாரால், சர்க்காரால் பாராட்டப்பட்டு பாடப் புத்தகமாகவும் இருந்து வருகிறது. பாட்டுக் கச்சேரிகளிலும் பாடப்படுகிறது.

ஆகவே திராவிட கழக அங்கத்தினர் எனது இந்த வேண்டுகோளை அருள் கூர்ந்து சுயமரியாதைக் கண்கொண்டு பார்த்து லட்சியப் படுத்துவார்கள் என்று கருதுகிறேன்.

ஈ. வெ. ராமசாமி.

பெண்கள் பகுதி:

வருக தோழியர்களே!

"தோழியர் டி. கோதைநாயகி"

★

இந்த 48-ம் ஆண்டிலே கூட பெண்களாகிய நாம், ஆண்களுக்கு அடிமையாகவே யிருக்கவேண்டியிருக்கிறது. ஏன் என்றால் பெண்கள் மனதிலே புரட்சி தோன்றாததினால் தான்! நாம் எந்தக் காரியத்தையும் சுயமாகச் செய்ய உரிமையில்லை. நாம் இப்படியே இருந்தால் நமக்கும், தொழுவத்திலே கட்டிக் கிடக்கும் மாட்டுக்கும் என்ன வித்தியாசம்? இதைப் பற்றி எந்தப் பெண்களும் சிரத்தை எடுத்துக் கொள்ளவில்லை. இதற்குக் காரணம் என்ன? பெண்கள் உணர்ச்சியற்ற மரக்கட்டை என்று சில பேர் சொல்லுகிறார்களே அதுதானா? என்பதை ஒவ்வொரு தோழியர்களும் சிந்தித்துப் பார்த்து, பெண்கள் சுதந்தரத்திற்காகக் கொஞ்சமாவது பாடுபடவேண்டும். விதைக்காமல் அறுவடை செய்ய முடியுமா? பெண்கள் உழைக்காமல் பலனை எதிர்பார்ப்பது, முடவன் கொம்புத் தேனுக்கு ஆசைப்பட்டது போல்தான் ஆகும். உழைப்பது என்றால் சமயல் வேலை செய்வது போல் அல்ல. (அதுதானே நமது பழக்கம்) சுதந்தரத்திற்காக உழைப்பது என்றால், கொஞ்சம் வீரம், தைரியம், தன்மானம் வேண்டும். ஒரு பெண்ணுக்குத் தன்மானம் என்ற தேள் கொட்டினால், எல்லாப் பெண்களுக்கும் சிந்தனை என்ற நெறிகட்ட ஆரம்பித்து விடும். இது உண்மையில் நடக்கக் கூடியது. ஒருபெண் தலையில் காகிதப் பூ வைத்துக் கொண்ட மறு நிமிடமே, எத்தனை ஆயிரம் பெண்கள் தலையில் கட்டுக் கட்டாக காகிதப் பூ ஏறிற்று? ஆகவே தன்மான உணர்ச்சியினால் ஒரு பெண் தொண்டு செய்யக் கிளம்பினால், எல்லாப் பெண்களும் தொடர்ந்து வருவார்கள் என்பதே என் திடமான நம்பிக்கை.

இப்பொழுது நானும் வீட்டுச் சிறையில்தான் அடைபட்டுக் கிடக்கிறேன். எனக்குச் சுயமாக பேப்பர் வரவழைக்க உரிமையில்லை. எல்லாப் பேப்பருக்கும் பிறர் கையைத்தான் எதிர்பார்க்க வேண்டியிருக்கிறது. எங்கள் ஊருக்குச் சமீபத்தில் திராவிடத் தந்தை பெரியார் அவர்கள் சொற்பொழிவாற்றினார்கள். அதைக் கேட்பதற்கு எனக்கு மட்டற்ற ஆவல். ஆனால் பாழும் சமூகம் எனக்கு இடந்தரவில்லை. என்னைப்போல் எத்தனையோ தோழியர்கள் சமூகச் சிறையில் அடைபட்டு, அவர்களுடைய ஆவலையெல்லாம் அடக்கிக் கொண்டிருக்கிறார்கள்! இந்த விலங்கை அகற்றுவதற்குச் சுதந்தரமுள்ள நமது திராவிடத் தோழியர்கள், வீட்டுச் சிறை என்னும் கொடிய நோயை அகற்றப் பாடுபடவேண்டும்! இப்பொழுது பெண்கள் பகுதியில் இடம் பெறுவதற்குக் கூடப் பாழும் சமூகம் எனக்கு உரிமை கொடுக்கவில்லை. என் துணிவினால்தான் எழுதுகிறேன். ஆகையினால் சுதந்தரமுள்ள தோழியர்களே! நம் உரிமைக்காகப் பாடுபட முன்வாருங்கள்.

பெண்கள் முன்னேற்றத்தைப் பற்றி மேடை ஏறிப்பேசும் ஆண்கள், தங்கள் வீட்டுப் பெண்களுக்கு மட்டும் சுதந்தரம் கொடுக்க மறுக்கிறார்கள். இந்த இழிநிலை ஒழிய வேண்டும். அதற்காகப் பெண்களாகிய நாம் பாடுபட்டால்தான் காரியம் வெற்றியாகும். தோழியர்களே! ஆண்களைப்போல் பெண்களுக்கும் படிக்க வசதி செய்யவேண்டும். கிராமத்தில் இருக்கும் பெண்களுக்கு 12 வயது ஆனஉடன் வெளியூர்ப்பள்ளிக்குச் செல்லக்கூடாது என்று, பெற்றோர்கள் தடை விதிக்கிறார்கள். இந்த அடிமை மனப்பான்மை ஒழியவேண்டும். ஒவ்வொரு கிராமத்திலுள்ள பள்ளிகளிலும் குறைந்தது 3வது பாரம் வரையிலாவது அமைக்கவேண்டும். கிராமத்தில் இருக்கும் பெண்களுக்குப் பள்ளி வசதியில்லாததினால்தான், நம் பெண்களில் அநேகம் பேர் படிப்பற்றவர்களாயிருக்கிறார்கள். முக்கியமாகக் கிராமத்தில் பள்ளி வசதி செய்யவேண்டும்.

திருமண விஷயத்தில் திராவிடப் பெண்களாகிய நம்மை மிகவும் கேவல நிலையில் வைத்திருக்கிறார்கள் நம் பெற்றோர்கள். மண விஷயத்தில் இழைக்கும் தீங்கோ மிகமிகக் கொடியதாகும். நம் கொள்கைக்கு முரண்பாடான ஒருவனைப் பிடித்துக் கொண்டுவந்து, இவனைத்தான் நீ மணம் முடித்துக் கொள்ளவேண்டும் என்று சொன்னால், பேசாமல் நாம்தலை வணங்க வேண்டியதுதான். அப்படியில்லை என்று ஏதாவது எதிர்த்துச் சொன்னால், சமூக விரோதியாகி விடுவதுமன்னியில், நமது பெற்றோர்களுக்கும் விரோதியாகி விடுகிறோம். இந்தப் பாழாய்ப்போன சமூகம் நம்மை எந்த விதத்திலும் முன்னேற விடுவதில்லை. தோழியர்களே! இந்தக் கேவல நிலையை அகற்ற முன்வாருங்கள்.

திருமண விஷயத்திலும் ஆணுக்கொரு நீதி பெண்ணுக்கொரு நீதியாகவே இருக்கிறது. ஆண்கள் மட்டும் அவர்களுக்குப் பிடித்த பெண்ணை மணம் செய்து கொள்ளலாம்! ஆனால் பெண்கள் மட்டும் தனக்குப் பிடிக்காதவனைப் பிடிக்கவில்லை என்று சொல்லக் கூடாது. சொன்னால் நமக்குச் சமூகம் அளிக்கும் பரிசு "குலத்தைக் கெடுக்க வந்தவள்" "அடங்காப்பிடாரி" என்ற வசைமொழிகள். இந்த அடிமை மனப்பான்மை ஒழியவேண்டும். நம் பெண்கள் முன்னேற்றமடையாததினால்தான் நம்மை மேலும் மேலும் கேவல நிலையில் வைத்திருக்கிறார்கள். தோழியர்களே! இன்னுமா உறக்கம்? விழித்தெழுங்கள்! போராட்டத்தை வெற்றிகரமாக நடத்த வருக வருக என்று அழைத்துக் கொண்டு இக்கட்டுரையை முடித்துக்கொள்கிறேன்.

ஒழிக! பெண்ணடிமை.
வாழ்க! பெண்ணுலகம்.

★

தாய்நாட்டின் நலிவு.

மாவண்ணா. தேவராசன் இயற்றியது.

"என்றும் அழியாத இலக்கிய வரிசையில் இடம் பெறத்தக்க நூல்......"
—"குடி அரசு"

தனிப்பிரதி 0-3-0. தபாலில் 0-4-0. 25% கழிவு. விவரங்கட்கு:—

இலக்குமி நூல் பதிப்பகம்,
(திருவத்திபுரம், வ. ஆ.)

பெரியவர்களின் அறிக்கை

இருபக்கமும் பொருந்த வேண்டும்.

"கைவல்யம்"

★

தெய்வ ஸ்தலங்களையெல்லாம் தெரிசித்துப், புண்ணிய நதிகளிலெல்லாம் குளித்து, விரத நியமங்களால் மெலிந்து சோர்வடைந்த ஒரு சன்னியாசி, களைப்பால் ஒரு தாசி வீட்டுத் திண்ணையில் படுத்திருந்தார். அந்த வீதியின் வழியே ஒரு பிரேதத்தை மயானத்திற்கு எடுத்துச்சென்றார்கள். தாசி அதைப் பார்த்தாள். உடனே வேலைக்காரியைக்கூப்பிட்டு, அடியே! ராக்காயி, நீ போய் இந்தப் பிரேதத்தின் ஜீவன் சுவர்க்கத்திற்குப் போகிறதா? நரகத்திற்குப் போகிறதா? என்பதைத் தெரிந்து வா என்றாள். தெரிந்து வந்த வேலைக்காரி, அம்மா! இந்தப் பிரேதத்தின் ஜீவன் சொர்க்கத்திற்குப்போகிறதென்றாள். இதைக் கேட்ட சந்நியாசி திடுக்கிட்டு, ஆச்சரியப்பட்டு உள்ளே போய் வணக்கமாய், அம்மா! நான் எத்தனையோ சாஸ்திரம் படித்திருக்கிறேன், காசி ராமேஸ்வரம் நாலுதரம் போயிருக்கிறேன், போகாத கோவிலில்லை, குளிக்காத நதியில்லை, கும்பிடாத தெய்வமில்லை, அதன் ரகசியம் எனக்குத் தெரியவில்லை, நான் போகிற இடமும் எனக்குத்தெரியாது. நீங்களோ! தாசி. சொர்க்க நரகங்களுக்குப் போகிறவர்களைத் தெரிந்து வந்து, உங்கள் வேலைக்காரியே சொல்லி விட்டாள். இதன் இரகசியத்தை எப்படித் தெரிந்தீர்கள் என்று கேட்டார். தாசி வேலைக்காரியைப் பார்த்து, அந்தப் பிரேத ஜீவன் சுவர்க்கத்திற்குப் போகிறதென்று தெரிந்து வந்து சொன்னாயே, எப்படித் தெரிந்து வந்தாய்? என்பதைச் சந்நியாசிக்குச் சொல் என்றாள்.

சந்நியாசியாரே! அதைத் தெரிவது வெகு சுளுவான காரியம். பிரேதத்துடன் நானும் சிறிது தூரம் சென்றேன். அவரை எல்லோரும் நல்லவர், தர்மிஷ்டர், வட்டிக்கு வட்டி சேர்த்து ஏழைகள் பேரில் பத்திரமெழுதி வைத்துக்கொண்டு வேலை வாங்கினதில்லை, தன் பூமியில் குடிசை கட்டி வாழும் ஏழைகளை ஓட்டினதுமில்லை, குடிசையைப் பிடுங்கிக் கொண்டதுமில்லை, ஏழைகளின் கூலியைக் குறைத்து அடித்து அதிகாரம் செலுத்தினதில்லை, வயிற்றுக்குப் பத்தாத கூலி கொடுத்ததுமில்லை, ஒருபடி அரைப்படி நெல் அதிகம் கொடுப்பார், நோய்வாய்ப்பட்ட ஏழைகளுக்கு உதவி செய்யாமலிருந்ததில்லை, ஏழைப் பிள்ளைகளுக்குத் துணியும் படிப்பிற்குஉதவியும்வழங்கினார். பங்களாவாங்குவதிலும், கார் வாங்குவதிலும் மட்டும் அவர் பணம் செலவாகவில்லை, வைத்திய சாலைகளுக்கும், பள்ளிக்கூடங்களுக்கும் பணம் கொடுத்தார், சொன்ன வார்த்தை தவறமாட்டார், நியாய அநியாயங்களைத் தாட்சண்யமில்லாமல் கண்டிப்பார். அதிகார ஆணவம் அவரிடமில்லை, என்று. அவரைப் பற்றி அவர் செய்தது, நடந்தது முதலியவைகளை எல்லோரும் பேசிக்கொண்டு, இப்பேர்ப்பட்ட மனிதன் போய்விட்டாரே என்று எல்லோரும் துக்கித்துக்கொண்டுபோனார்கள். அதைக்கேட்டு நல்லவர்கள் மோட்சத்திற்குத்தானே போகவேண்டும்; சாஸ்திரமும் சமயமும் அப்படித்தானே சொல்லுகிறது என்று நினைத்து, அந்த ஜீவன் சொர்க்கத்திற்குப் போகிறது என்று அம்மாளிடம் வந்து சொன்னேன் என்றாள். அந்த ஜீவனைப்போல எல்லோரும் நடந்து சொர்க்கத்திற்குப் போகட்டுமென்று சொல்லி சந்நியாசியும் போனார். இந்தக் கதை எல்லோருக்கும் பொருந்துவது போல மந்திரிகளுக்கும் பொருந்தும்.

வைத்தியனாத அய்யர் சொல்லியபடி அய்யரை டாக்டர் சுப்பராயன் கூப்பிட்டதும், அவர் வந்ததும், டாக்டர் சுப்பராயன் வீட்டில் கூடிப்பேசினதும் என்ன வாதமாம்? வஞ்சனை வாதமா? ஏமாற்று வாதமா? இராஜகோபாலாச்சாரியார் உட்கார்ந்த நாற்காலியில் ஓமந்தூரார் உட்கார என்ன யோக்கியதை இருக்கிறதென்று சில அய்யர்கள் அங்கிருந்தவர்களிடம் சொல்லிக்கொண்டிருந்தது என்ன வாதம்? இந்த வாதத்திற்குப் பதில் தர்ப்பைப் பாயிலும், வெள்ளைக் கம்பளியிலும் உட்கார்ந்திருந்த பரம்பரை இராஜகோபாலாச்சாரி; ரெத்தனக் கம்பளம், மெத்தை, திம்பு திவாசில் உட்கார்ந்திருந்து வந்த பரம்பரை இராமசாமி ரெட்டியார் என்று சொன்னால், பார்ப்பாரைத் தூஷிக்கிற வகுப்புத் துவேஷியோ நாங்கள்? பார்ப்பார் சொல்லுவது டாக்டர் சுப்பராயன் காதுக்குப் போவதில்லையோ? காதும் வாயும் ஒன்றாயிருக்கையில் போய்த்தான் என்ன பிரயோஜனம்? மந்திரிக்கு நாங்கள் பயந்தாலும், எங்கள் உணர்ச்சி பார்ப்பார் சொல்லுவதற்குப் பதில் சொல்லப்போகிறதே! கல்கத்தா கவர்னருக்குச் சென்னை மந்திரிசபையில் கட்சியேன்? எதற்கு? சமரச சன்மார்க்க வகுப்பு சமரசமென்று இதற்குப் பெயரோ? சபையின் நேர்வழியை விட்டு அந்தரங்க வழியில் சென்றால் அவைகள் வெளியே வராதா? ஜனங்கள் கூச்சல் போடாமலிருப்பார்களா? டாக்டர் சுப்பராயனின் காதில் விழாமலிருக்குமா? கூச்சலுக்குக் காரணம் பிரத்தியட்சம். அதை நிறுத்திவிட்டால் கூச்சல் தானே நின்றுவிடும். ஊர்வாயை மூட உலைமூடியுண்டா?

மந்திரி டாக்டர் சுப்பராயருக்கு இதில், சில முக்கிய விஷயங்களை ஞாபகப்படுத்துகிறேன். துவேஷ மனப்பான்மை வேண்டாம் என்கிற தலைப்புடன், காங்கரஸ்காரர்களுக்கு டாக்டர் சுப்பராயன் ஒரு வேண்டுகோள் பத்திரிகைகளில் விடுத்திருக்கிறார். அந்த அறிக்கை, ஒரு கட்சியின் விவகாரத்தைச் சொல்லி விட்டுப் போகும் வக்கீலின் பேச்சைப் போல இருக்கிறதேயல்லாமல், இரண்டு கட்சிகளின் விவகாரங்களை ஆலோசித்துத் தீர்ப்புச் சொல்லும் ஜட்ஜியைப் போவில்லை. நியாயமாகப் பார்த்தால் அவருடைய அறிக்கையில் இரண்டு கட்சிகளின் நியாயங்களையும்சொல்லி, இரண்டு கட்சிக்காரர்களுக்கும் புத்தியோ எச்சரிக்கையோ இருக்க வேண்டும். அப்படியில்லை. முன்புதேவஸ்தானபோர்டுத் தலைவர் உத்தியோகம் டாக்டருக்கு கொடுக்கலாமென்று கவர்மெண்டு நினைத்தது. பிரம சமாஜத்தார்களுக்குக் கொடுக்கக் கூடாதென்று ஆட்சேபித்தார்கள். பன்னிரண்டு ஹைக்கோர்ட்டு ஜட்ஜிகளிலிருந்து பதினாலாக்க ஆலோசித்தார்கள். அப்பொழுதுள்ள நிலையில் அந்த இரண்டு ஜட்ஜி வேலையும், பார்ப்பார் அல்லாதவர்களுக்குக் கொடுத்து விடுவார்களோ என்று, லண்டனிலிருந்த ஆனரபிள் சீனிவாச சாஸ்திரி, இந்தியா மந்திரி ஆபீஸில் அதைத் தடுக்கத் தன்செல்வாக்கை உபயோகித்தார். டாக்டர் நாயரும், தியாகராஜ செட்டியாரும் போட்ட சண்டையில், பதினான்கு ஜட்ஜி ஆகி மாதவன் நாயருக்கும், கோமுட்டி செட்டியார் வெங்கிட சுப்பராவிற்கும் கொடுத்தார்கள். பார்ப்பாரல்லாதவர்கள் உத்தியோகத்திற்குப் போடும் விண்ணப்பங்களை மறைப்பதும், காலத்தைக் கடத்தி உத்தரவு அனுப்புவதும், அதற்குள் தங்கள் ஆளுக்கு உத்தரவு போடுவதும், வந்து கேட்டால் பொருத்தமில்லாத பதில் சொல்லுவதும், சிறிது அழுத்தமாகக் கேட்டால் பிராமணத் துவேஷி என்பதும், அந்தக் காலம் முதற்கொண்டு இந்தக்காலம் வரையிலும் நடைபெற்றுவருவதால் தான் எங்கள் கூச்சல் இருந்து கொண்டேயிருக்கிறது. அதைவிட நாங்கள் என்ன செய்ய முடியும்? நியாய அநியாயங்களை எல்லோரும் தெரியக் கூச்சல் போடுகி

[தொடர்ச்சி 14ம் பக்கம்]

"ஸ்டண்ட்" வேலைக்காரர்கள்.

"துறையூர் நாராயணன்"

★

காங்கரசுக்கு காதலியாகவும், வைதீகத்திற்கு வைப்பாட்டியாகவும், புத்துலகிற்கு புல்லுருவியாகவும், எதிர்காலத்திற்கு ஏறிச் செல்லமுடியாத முறிந்த ஏணியாகவும், வருணாசிரமத்திற்கு வழிகாட்டியாகவும், முதலாளித்துவத்துக்கு முத்தமிடும் முத்தண்ணாக்களாகவும், ஒரே சமயத்தில் பல்வேறு வேடம் பூண்டு காங்கரசோடு ஊடல் செய்து கொண்டிருந்த கம்யூனிஸ்டுகள் இன்று அடங்கி, ஒடுங்கி ஓய்ந்து உட்கார்ந்துவிட்டனர்.

• விடாதே! பிடி! ஓடு! உதை! தூக்கிலிடு! கைவைக்காதே! இரும்புக்கரம்! பிற்போக்காளர்கள்! பணமூட்டைகள்! இதுபோன்ற சில வார்த்தைகளை மட்டுமே வைத்துக்கொண்டு சித்து விளையாடல்கள் புரிந்து வந்த அவர்களின் உடலிலே இன்று சோர்வுதட்டி விட்டது.

இனி அடுத்த கட்டம். காங்கரசோடு ஊடல், ஒய்யாரநடை நடத்தல், முகத்தோடு முகம் வைத்து உரசுதல், பிணங்குதல், பின் கூடுதல் போன்றவைகளைச் செய்து வந்த கம்யூனிஸ்டுகளின் செயலை இன்று சோசியலிஸ்டுகள் கைக்கொண்டு விட்டனர்.

தேவடியாள் கற்பின் உயர்வைப் பற்றிப் பேசுவதைப்போல, கசாப்புக் கடைக்காரன் ஜீவகாருண்யத்தின் பெருமையைப்பற்றிப் பேசுவதைப்போல, சர் ஆர். கே. சண்முகம் செட்டியாரும், ராஜாசர் அண்ணாமலை செட்டியாரும் இன உணர்வின் பெருமையைப் பற்றிப் பேசுவதைப் போல, டாட்டாக்களும், பிர்லாக்களும் அபேதவாதத்தின் அருமையைப்பற்றிச்சொன்மாரி பொழிவதைப் போல, இதோ நம்முடைய நாட்டிலே சர்மாக்களும், சாஸ்திரிகளும், அய்யர்களும், அய்யங்கார்களும் சோசியலிஸம் பேசிக் கொண்டு வருகின்றனர்.

இந்தப் பெரிய தனக்காரர்கள் தான் தனித்த சோசியலிஸக் கட்சியை அமைக்கக் காங்கரசிலிருந்து வெளியேறப் போகிறார்களாம். தாராளமாக வெளியேறட்டும்! இவர்கள் காங்கரசிலிருந்து வெளியேறுவதனாலேயோ அல்லது வெளியேறாமல் அதனுள்ளேயே இருந்து அதற்கு 'ஆமாம் சாமி' போடுவதனாலேயோ யாருக்கும் எவ்விதமான லாபமுமில்லை; நஷ்டமுமில்லை. 'ஏதோ இருக்கிறோம், அதற்காக எந்த எழுவையாவது பேசிக் கொண்டிருக்கவேண்டுமே' என்பதற்காக வெறும் வெத்து வேட்டுகள் கிளப்பிக் கொண்டிருக்கும் இந்த 'அரோகரா' கூட்டத்தினால் யாருக்கும் எந்தவிதமான லாபமுமில்லை என்பதை இன்றையத் தொழிலாளர் உலகம் நன்றாக அறியும்.

'சோசியலிஸ்டுகள்' என்ற முற்போக்கான லேபிள் ஒட்டிக் கொண்டு பிற்போக்கான முறையிலே செயலாற்றிக் கொண்டு வரும் இவர்களின் தலைவரான ஜெயப்பிரகாஷ், தாங்கள் காங்கரசிலிருந்து வெளியேறுவதற்கு என்ன காரணம் கூறுகிறார். கேளுங்கள்.

.........காங்கரஸ் அதிகாரத்தின் உறைவிடமாகவும், தனிப்பட்டவர்களின் பெருமைக்குக் கருவியாகவும் ஆகிவிட்டது. சுயநலஉரிமைக்காரர்கள் அதில் அதிகமாகி விட்டார்கள். அவர்களுடன் லஞ்சமும் பதவி வேட்டையும் வளர்ந்துவிட்டது. காங்கரஸ் மெம்பர் சேர்ப்பதிலிருந்து தேர்தல் வரையில் ஒரே ரூதாட்டமாகி விட்டது. சுயநலமும் அதிகார வெறியும் மதவெறியும் மலிந்து விட்டது.

என்றுகூறியிருக்கிறார்.பெரியார் ஈ. வெ. ரா. அவர்கள் சுமார் 15 வருடங்களுக்கு முன்பே உணர்ந்து வெளிப்படுத்திய இந்தப் பாடத்தை இன்றுதான் உணர்ந்தனர் இந்த சோசியலிஸ்டுகள். எதிர்காலத்திலே காங்கரஸ் கட்சியானது இந்த நிலைமைக்குத் தான் போகும். இவர்கள் கையில் தான் சிக்கும்—என்று அன்றே படம் பிடித்துக் காட்டிய தலைவர் பெரியார்போன்றவர்களின் தீர்க்கதரிசன புத்தி, தோழர் ஜெயப்பிரகாஷ் போன்றவர்களுக்கு இல்லையென்றால், நாட்டின் நெருக்கடி நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டு வரும் இக்காலத்திலேயும், எதிர்காலத்திலேயும் இவர்கள் எப்படித்தான் கட்சியை நடத்திக்கொண்டு போகப் போகிறார்களோ தெரியவில்லை.

தோழர் ஜெயப் பிரகாஷ் அவர்கள் ஆகஸ்ட் புரட்சியின் உயிர் நாடியாக இருக்கலாம். சுபாஸ் போஷ் அவர்கள் இந்தியாவின் சுதந்தரத்தைஸ்தாபிக்க, வெளிநாடுகளுக்குச் சென்று படை திரட்டிப் போரிட்டுக் கொண்டிருந்த போது இவர், உள்நாட்டிலே, நேபாலிலே மலைஜாதியினரைக் கொண்டு கொரில்லாப் படையைத் திரட்டி, பிரிட்டிஷ் அரசாங்கத்தின் அதிகாரிகளோடு போரிட்டவராக இருக்கலாம். அமெரிக்கா சென்று கல்வி பயின்று அறிவு திரட்டியவராக இருக்கலாம். ஆனால் ஒரு கட்சியின் தலைவனுக்கு—அல்லது செயலாளனுக்கு இருக்க வேண்டிய தீர்க்க தரிசனமும், முகதாட்சண்ய மற்ற செயல் செய்யும் எண்ணமும், நிரந்தரமான மன எழுச்சியும் அவரிடம் இல்லையே.

தோழர் ஜெயப் பிரகாஷ் அவர்கள், காங்கரசிலிருந்து சோசியலிஸ்டுகள் வெளியேறுவதன் காரணத்தைக் குறிப்பிடும்போது, இன்றையக் காங்கரசில், வகுப்புவாதவெறியர்களும், பணமூட்டைகளும் புகுந்துவிட்டனர் எனக் கூறுகிறார். இது அவரின் பலஹீனத்தைத் தான் காட்டுகிறது. அவர் நினைப்பதைப்போல, காங்கரசிலே, பணமூட்டைகளும் வகுப்புவாதிகளும் இன்று புதிதாகப் புகவில்லை. அன்றே—அதாவது காந்தியார் காங்கரசிலே புகுந்து அதனைத் தலைமையேற்றுநடத்த ஆரம்பித்த அக்காலத்திலேயே புகுந்து விட்டனர். தலைவர் பெரியார் அவர்களும், கப்பலோட்டிய தமிழன் வ. உ. சி. போன்றவர்களும், தோழர் எம். என். ராய் போன்றவர்களும் காங்கரசிலிருந்து விலக, இந்தப் பிற்போக்காளர்கள் தான் காரணம் என்பதை அவர் உணரவேண்டும். ஆனால் இவர்களின் ஆதிக்கமெல்லாம் அன்று அதிகமாக வெளியே தெரியாமல் இருந்ததற்குக் காரணம்,

(தொடர்ச்சி 13-ம் பக்கம்)

ரோஜா முத்தையா

பெரியார் அவர்களின்

சொற்பொழிவுத் தொகுப்பு.

★

சமீபத்தில் நடந்த சுற்றுப்பிரயாணத்தின்போது பெரியார் அவர்கள் வெளியிட்ட சில கருத்துகளின் தொகுப்பு கீழே தரப்படுகிறது.

போதிய நேரவசதியின்மை காரணமாக அன்றாட சொற்பொழிவுகள் அவ்வப்போதே வெளியிட முடியவில்லை யாகையால் இத்தகைய தொகுப்பு வெளியிடுவது அவசியமாகிறது? எங்கு எப்போது? என்ற விவரங்கள் இல்லாமைக்காக தோழர்கள் மன்னிக்கவேண்டுகிறோம்.

[ஆ—ர்]

நான் அரசியல் என்னும் பொருள் பற்றிப் பேசுவேன் என்று தலைவர் குறிப்பிட்டார். நான் அரசியலைப் பற்றிப் பேசுவதற்காக வந்தவனல்ல. மேலும் அரசியல் பற்றிப் பேசுவதும் எனக்கு எப்போதும் முக்கிய கொள்கை அல்ல. நான் சமூகச்சார்பில்தான் அதற்குச் சம்பந்தப்பட்ட அரசியல் பற்றிப் பேசுவ்து வழக்கம்.

கழகத் திட்டம்.

தற்போதைய' நிலையில் அரசியலில் சம்பந்தம் வைத்துக் கொள்ளக்கூடாது என்பதுதான் எங்கள் கழகத்தின் திட்டமுமாகும். 1939-ம் ஆண்டில் காங்கரஸ் பதவியை விட்டு ஓடிய போதே ஜஸ்டிஸ் கட்சித்தலைவன் என்கிற முறையில் கட்சி நிர்வாக சபையைக் கூட்டி ஜஸ்டிஸ் கட்சி மந்திரி பதவி எற்கக்கூடாது என்று தீர்மானம் செய்தேன். அத்தீர்மானத்தின் காரணமாக சில ஜஸ்டிஸ் பிரமுகர்களுக்கு என்மீது வருத்தம்கூட எற்பட்டது. சமூக இழிவு நீங்கி மக்களெல்லாம் மனிதத்தன்மை அடையும்படி செய்யவேண்டும் என்பதுதான் எனது முக்கிய கடமை என்பதையும், அரசியல் பிரவேசம் இதற்குப் பாதகமாகவே முடியும் என்பதையும் உணர்ந்ததால்தான் இத்தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. பதவிப் பற்றுள்ள சிலர் இதனால் அதிருப்தி கொண்டு கட்சியிடையே கலவரம் விளைவிக்க முயற்சித்தனர்என்றாலும், நான் தலைவனாயிருக்கும் வரையிலும் ஜஸ்டிஸ் கட்சியார் இப்படிப்பட்ட நிலையில் அரசியலில் பிரவேசிக்க முடியாது என்பதை அவர்களுக்குத் தெளிவாக்கி விட்டேன். ஆகவே பதவிக்குஆக, சொந்த வாழ்வுக்காக கட்சியில் ஒட்டிக்கொண்டு இருந்த சிலர் என்னைத் தலைமைப் பதவியினின்று நீக்க பலமான முயற்சி செய்தார்கள். ஜஸ்டிஸ் கட்சியின் தலைமைப் பதவியில் ஆசைகொண்ட சிலர் அதைத்தங்களுக்கு நல்லவாய்ப்பு என்று கருதி மறைமுகமாக இதைத் தூண்டிவந்தனர். சேலம் மகாநாட்டின் போதுதான் இம்முயற்சி உச்சநிலை அடைந்தது.

அம்முயற்சியில் அவர்கள் படுதோல்வியடையவும், மகாநாடு முடிந்தவுடன் கிளை ஸ்தாபனங்கள் அமைக்கும் வேலையும்அங்கத்தினர் சேர்க்கும்வேலையும் தொடங்கப்பட்டு 6 மாதத்திற்குள் 200 கிளை ஸ்தாபனங்கள் எற்படுத்தப்பட்டு 20000 அங்கத்தினர்கள் சேர்க்கப் பட்டனர். இவ்வேலை முடிந்ததும் திருச்சியில் மாநாடு கூட்டப்பட்டு சேலத்தில் நிறைவேற்றப் பட்ட தீர்மானங்கள் ஊர்ஜிதம் செய்யப்பட்டன. அதன்படி அன்றே சிலர் நியமனப்பதவிகளைத் துறந்தனர். பட்டம் பதவிகளைவிட வசதி இல்லாத சிலர் கட்சி சம்பந்தத்திலிருந்துநீங்கிக் கொண்டனர்-சிலர் வேறுகட்சி உண்டாக்கிக்கொண்டதாகக்கூறி அதுதான் ஜஸ்டிஸ்கட்சி என்று சொல்லிக்கொண்டனர். ஜஸ்டிஸ் கட்சியின் பெயரால் அநேமாக ஒருவரும் நிற்கவில்லை என்றாலும் ஒருவரிருவர் தங்கள் கட்சியைக்காட்டிக்கொள்ள நின்றனர். அவர்கள் உண்மையான ஜஸ்டிஸ் கட்சியின் சார்பாக நிறுத்தப்பட்டவர்கள் அல்ல வென்றும் ஜஸ்டிஸ் கட்சிக்காரர்களும், ஜஸ்டிஸ் கட்சியை ஆதரிக்கும் பொதுமக்களும் அவர்களுக்கு ஒட்டு கொடுக்கக் கூடாதென்றும் அறிக்கை வெளியிட்டோம். சுவரொட்டிகள் மூலமும் விளம்பரப் படுத்தினோம். சில ஊர்களில் தேர்தல் எதிர்ப்புப் பிரசாரமும் செய்தோம்.

எங்கள் கவலையெல்லாம்.

ஆகவே தோழர்களே! திராவிடக்கழகத்தாருக்கு அரசியல் பற்றிக் கவலையில்லை. மந்திரி பதவியைக் கைப்பற்ற வேண்டுமென்ற எண்ணமும் எங்களுக்குக் கிடையாது. அரசியல் தலைவர்களாக எந்தக் கட்சியில் இருந்து யார் வந்தாலும் எங்களுக்குக் கவலையில்லை. அவர்கள் சம்பளக் கணக்கைப் பார்த்துக் கொள்வதோடு நின்று விடாமல் மக்களுக்குச்சரியானபடிபணியாற்றினால் ஆதரிப்பதும்,இல்லாவிட்டால் குறை கூறுவதும், நல்ல முறையில் பணியாற்றும்படி மக்களால் நிர்ப்பந்தப் படுத்தப் படவேண்டும் என்பதுதான் எங்கள் கவலையும் அரசியலும் ஆகும். நாங்கள் அரசாட்சியின் மீது குறை கூறுவதெல்லாம் எங்களுக்கு கள்ள மார்க்கெட் லைசென்ஸ் பெறுவதற்காகவோ, அல்லது அவர்களை ஒழித்து விட்டு பதவியைக் கைப்பற்றிக் கொள்ளவோ, அல்லது அவர்களுடைய உத்யோகங்களில் பங்கு கொள்ளவோ அல்ல. ஆட்சியாளர் யாவரேயாயினும் அவர்கள் ஒழுங்காக மக்களின் நலன் கருதியே உழைத்து வரவேண்டும் என்பதுதான் எங்கள் விருப்பம்.

ஒரு நீக்ரோ ஆண்டாலும் ஆளட்டும்.

ஆகவே அரசியல் பதவியில் விருப்பமுள்ள எந்தக்கட்சியும், நாங்கள் போட்டி போடுவோமோ என்று கருதி எங்களை எதிர்க்கவேண்டிய அவசியமே இல்லை. திராவிட சமூகத்தைச் சேர்ந்த யாவரும் மற்றவர்களைப்போல் மனிதத் தன்மை பெற வேண்டுமென்பதுதான், அம்மனிதத் தன்மை அடைவதற்குத் தடையாயுள்ளவைகள் விலக்கப்பட வேண்டுமென்பதுதான் எங்கள் கோரிக்கை. எங்களை ஒரு நீக்ரோ ஆண்டால்கூடக் கவலைப்பட மாட்டோம். அவன் மனிதத்தன்மையோடு ஆளவேண்டுமென்பதுதான் எங்கள் ஆசை.

கள்ளமார்க்கட் பேர்வழிக்குக் கழகத்திலிடமில்லை.

அரசாங்கத்தைக் குறை கூறுவதன் மூலம்எவராவதுசிறுசலுகைபெறவோ, அல்லது கள்ளமார்க்கட் செய்ய பர்மிட் பெறவோ, மந்திரிகளுக்கிடையே தரகராயிருந்து கொள்ளையடிக்கவோ, முயற்சி செய்வாராயின், அத்தகையவ்ருக்கு திராவிட கழகத்தில் வேலையில்லை என்று கட்டாயம் கூறிவிடுவோம். கூறுவது மட்டுமல்ல. அதைப் பத்திரிகையில் போட்டு விளம்பரப் படுத்தி அவன் அவமானம் அடையும்படியும் செய்துவிடுவோம். அவனுடைய அயோக்கியத்தனத்தை மூடி வைக்க ஒருபோதும் முயற்சிக்கவுமாட்டோம். திராவிட கழகம் சமுதாய சீர்திருத்தத்திற்காகவே இருந்து வருகிறது.

(தொடரும்)

★

திராவிட பத்திரிகாசிரியர் கழகம்.

திராவிட இயக்கக் கொள்கைகளைப் பரப்பும் எல்லா ஆசிரியர்களையும் கொண்ட கழகம் ஒன்றை நிறுவ 23உ சென்னை மவுண்ட்ரோட் பீரான் சாய்பு தெரு 1வது இல்லத்தில் ஆலோசனைக் கூட்டம் நடைபெறும். இதற்கு ஆசிரியர்கள் தவறாது வந்து ஒத்துழைப்பையும் ஆலோசனையை நல்க வேண்டுகிறோம்.

எ. எஸ். வேணு.
என். வி. நடராசன்
அமைப்பாளர்கள்.

ரோஜா முத்தையா

பொதுவுடைமையும் தொழிலாளர்களும்.

"கே. பாலையா"

★

சொல்புத்தியாவது வேண்டும், அல்லது சொந்தப் புத்தியாவது வேண்டும் என்று பெரியோர்கள் அடிக்கடி சொல்லக் கேட்டிருக்கிறோம்.

நாம் சொல்வதைச் சில மேதாவிகள் கேட்பதும் இல்லை, கேட்டு நடப்பதும் இல்லை. தாங்களாகவே ஏதோ ஒரு பெரிய காரியத்தையும், திட்டத்தையும் கண்டு பிடித்து விட்டதாகவும், அதை அமுல் நடத்தி மக்களுக்குப்பெரிய நன்மையையும், நாட்டுக்குநலத்தையும் செய்து விடுவதாகவும் கனவு கண்டுவிடுகிறார்கள். அதோடு போகிறார்களா! அந்தக் காரியத்தில் தோல்வி அடைந்த பிறகாவது, அவன் சொன்னானே! அதையாவது பின்பற்றிப் பார்க்கலாமா என்ற எண்ணம் வருகிறதா? அதுவும் கிடையாது. தாங்களாகவே கண்டுபிடித்ததாகவும், தங்களுக்கே அந்தப் பெருமை வரவேண்டுமென்றும், ஆசைப்பட்டுக்கொண்டு கன்னா பின்னா வென்று காரியத்தில் இறங்கி விடுகிறார்கள். நாம் அடிக்கடி தீண்டாமை கூடாது, கோவில்களில் உற்சவம் ஆடம்பரம் கூடாது, ஜாதிமத பேதம் கூடாது என்றெல்லாம் வற்புறுத்திவருகிறோம். இன்னும் பல துறைகளில் முன்னேற்றம் வேண்டுமென்று சொல்கிறோம். ஆனால் அதைப் பின்பற்றியோ, அதற்கு ஆதரவு காட்டியோ, நாம் சொல்வதை ஆதரித்து ஒரு வார்த்தைகூட எழுதவும் மாட்டார்கள், பேசவும் மாட்டார்கள். ஆனால் தங்கள் தோல்வியையாவது ஒப்புக் கொள்வார்களா? அதுவும் அவர்களிடம் நடக்காது.

நாம் தொழிலாளத் தோழர்களுக்கு அடிக்கடி சொல்லியும் எழுதியும் வந்தோம். ஆனால் அவர்கள் காதில் போட்டுக் கொண்டதாகக் காட்டிக் கொள்ளவேயில்லை. கம்யூனிஸ்ட் தோழர்கள் காட்டும் கூலி உயர்வுத் திட்டத்திற்கு மயங்கினார்களே தவிர, நாம் சொன்ன தொழிலாளர் என்ற நிலை போகவேண்டுமென்றதை ஒரு கடுகளவாவது நினைத்துப் பார்க்கவில்லை. இத்தனை காலமாக அடிக்கடி வேலை நிறுத்தம் செய்தனர்; தடியடி பட்டனர், சிறை சென்றனர். இருந்தும் என்ன பயன்? ஏதோ கொஞ்சம் கூலி சேர்த்துக் கொடுத்தார்கள். இரண்டு நாளைக்குச் சினிமாவுக்கும், தெய்வத்தின் உண்டியலுக்கும், குடி கூத்திக்கும் செலவு செய்ய முடிந்ததே தவிர, தொழிலாளர் நிலை ஏதாவது உயர்ந்ததா என்றால், எந்தத் தோழரும் தலை குனிவதைத் தவிர ஆதாரம் காட்ட முடியாது. தொழிலாளர் நிலை முன்னிலும் மோசமென்று கூடச் சொல்லலாம். மாதக்கணக்கில் மில்கள் மூடப்பட்டுக்கிடந்தால், தொழிலாளர் அதிகமாகப் பெற்ற கூலியை எத்தனை நாளைக்கு வைத்துக் கொண்டு செலவு செய்ய முடியும்? கோயமுத்தூர், மதுரை, சென்னை முதலிய ஊர்களில் உள்ள மில்கள் மூடிக்கிடக்கின்றன. கேட்டால் முதலாளிகள் எங்கள் கம்பெனிக்கு நஷ்டம் வருகிறது; இதோ! கணக்கைப் பார்த்துக் கொள்ளுங்கள் என்று காண்பிக்கிறார்கள். மந்திரிகளும் மற்றையோரும் ராசி பேசுகிறார்களே தவிர, தொழிலாளிக்கு எந்தவிதத்தில் நன்மை செய்யலாம் என்று நினைப்பதுகூட இல்லை. கூலி உயர்வா? இந்தா! குறைந்த நேர வேலையா? இதோ! ஒருமணி குறைத்து விட்டோம்! போனஸா? இதோ பெற்றுக் கொள்! இப்படியே நம்மை ஏமாற்றினார்களே தவிர, தொழிலாளி எந்த வகையிலாவது உயர்ந்தானா? அல்லதுதொழிலாளத்தன்மையாவது அவனை விட்டு நீங்கிறதா? என்று சிந்திக்க யாராலும் முடிவதில்லை. சட்டசபை முன்னால், கோவை மில் தொழிலாளர் உட்கார்ந்து கொண்டு ஏதோ விளம்பரப் பலகையைக் காட்டினார்களாம். இதைப் பத்திரிகையில் பார்த்த அறிவுள்ள எந்த மனிதனும் சிரிக்காமல் இருக்கமுடியாது. மந்திரிகள் என்ன செய்வார்கள்? பாவம்! அவர்கள் முதலாளிக்குப் பயந்தவர்கள். அவர்களிடம் முறையிட்டு என்னலாபம்? நேரே கம்யூனிஸ்ட் தோழரிடம் சென்று சத்தியாக்கிரகம் செய்திருந்தால், அதிலாவது ஏதோ கொஞ்சம் அர்த்தம் இருக்கும். கூலி உயர்வும், பஞ்சப்படியும், போனசும் கொடுத்து எந்த முதலாளி தொழிலாளி ஆகி உங்களோடு அட்டை விளம்பரம் தூக்கிக் கொண்டு ஊர் ஊராகத் திரிகிறார்கள்? தொழிலாளி இடத்திலே, நன்றாக உறிஞ்சினார்கள்! மூட்டைப் பூச்சி போன்று உப்பினார்கள்! தங்கள் வாழ்க்கையைச் செம்மைப் படுத்திக் கொண்டார்கள்! இப்பொழுது மில்கள் நஷ்டமாகிறது, மூடுகிறோம் என்கிறார்கள்! நாம் என்ன செய்ய முடியும்? வெட்டிக் கூச்சல் போடுவதைத்தவிர. இப்பொழுது கெஞ்சுவதைத்தவிர நம்மால் ஒன்றும் சாதிக்க முடிவதில்லை.

திராவிடக் கழகத்தாரின் சேலம் தீர்மானப்படி, தொழிலாளருக்குச் சேரும் போனஸ் தொகையை, அந்தந்த மில்களிலும் தொழிற்சாலைகளிலும் பங்குப் பணமாக சேர்த்திருந்தால், இந்த அய்ந்தாறு வருடங்களில் இந்தத் தொழிலாளத் தன்மையே ஒழிந்திருக்குமே! நாம் சொன்னதைக் கேட்டார்களா?

சேலம் மகாநாட்டில் பெரியாரவர்கள் நன்றாக விளக்கிச் சொன்னார்கள். "நீங்கள் கேட்கும் கூலி உயர்வினாலும், போனசினாலும் நீங்கள் ஒருக்காலும் முன்னேற முடியாது. உங்களுக்குத் தரக் கூடிய போனஸ் தொகையை நீங்களும் பங்குத்தொகையாகப்போடுங்கள். இம்மாதிரி ஒரு சில வருடங்களுக்குப் போட்டால், உங்கள் பங்கும் முதலாளியின் தொகைக்குச் சமமாக வந்து விடும்.

அப்பொழுது அந்தத் தொழிற்சாலைக்கு நீங்களும் முதலாளி ஆகிறீர்கள். லாபத்திலும் உங்களுக்குப் பங்கு உண்டு. நீங்களும் தங்கள் தங்கள் தொழிற்சாலை தான் என்றபொறுப்போடுவேலை செய்ய முடியும். முதலாளி ஏதாவது பித்தலாட்டம் செய்தால், இதோ உன் தொகையை எடுத்துக்கொள்! இந்த மில் எங்களுக்கே சொந்தம்! இனி நீ வெளி

[தொடர்ச்சி 12ம் பக்கம்]

ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

மூட நம்பிக்கை.

—:இங்கர்சால்:—

தமிழாக்கம்: அரங்கண்ணல்.

★

பெருமை வாய்ந்த மனிதன் இறக்கப் போகிறானென்பதால் பவுர்ணமியன்று ஆந்தை அலறாது; மனித வர்க்கமே மறைந்துவிட்டாலும் கிரகணங்கள், எரி நட்சத்திரங்கள் ஏற்படத்தான் செய்யும்;என்பது சிந்தித்துப்பார்க்கும் தன்மையுள்ள எவனும் புரிந்தவனாவான் என்பதோடு அவன், சூரியனின் உதயம் வடக்கேயிருப்பதாலோ, அல்லது சூரியப்புள்ளிகளைக்கண்டோ பயப்படக்கூடியவனாக இருக்கமாட்டான்! இது போன்ற நிகழ்ச்சிகளுக்கும், மனித வர்க்கத்துக்கும் துளிகூட எந்த விதச்சம்பந்தமும் இல்லையென்று அவனுக்குத் தெரியும். வெள்ளம் அழிக்கும் சக்தி வாய்ந்தது, புயல் நாசமாக்கும், பூகம்பம் பொருள்களைக் குட்டிச்சுவராக்கி விடும்; விண்மீன் ஒளி வீசும்; இரவும் பகலும் மாறிமாறிவரும்; மலர் மணம் பரப்பும்; தூசு படிந்த மேகமண்டலத்திலே, ஒளி வானவில்லை ஏற்படுத்தும் என்ற செய்திகள் அவனுக்குத் தெரியும். இவைகள் நிச்சயம் ஏற்படக்கூடியவையென்பதையும் அவன் உணர்வான்.

அறிவும், சிந்தனையுமுள்ள எந்த மனிதனும் பேய் இருப்பதாக நம்பமாட்டான். குட்டிச்சாத்தான், பூதம், பேய், கெட்ட ஆவிகள் எல்லாம் அறியாமை, பயம் ஆகியவைகளின் கற்பனைப் பொருள்கள் என்றும் அவனுக்குத் தெரியும்! எப்படித் துஷ்ட நினைவுள்ள இந்த ஆச்சரிய தேவதைகள் சிருஷ்டிக்கப்பட்டன என்றும் அவனுக்குத் தெரியும். அகில உலகிலும் ஆண்டாண்டு காலமாக பேய்கள், கெட்ட ஆவிகள் என்ற நம்பிக்கையிருந்து வருவது, சகல மதங்களிலும் இந்தக் கற்பனைப் பொருள்கள் கொண்டிருக்கும் இடம் எல்லாம் சிந்திப்பவன், அறிவுள்ளவன், எவனுக்கும் தெரியும்!

குடியானவனைப் போலவே குருக்களும் இவைகளை நம்பினான்! கஷ்டறக் கற்றவனும், 'நல்வியின் வாசனை'யைக்கூட அறியாத அறிவிலியும் சமநிலையிலுள்ள பேதைகளாகவேயிருந்தனர்! கடவுளை நம்பியது போலவே ஆண்டி, அரசன், பெண்கள், வீரர்கள், கலைஞர்கள், அடிமைகள், குற்றவாளிகள், அத்தனை பேரும் பேய் மீதும் நம்பிக்கை வைத்திருந்தனர்!

இவர்கள் கொண்ட நம்பிக்கைக்கு எந்தக் காரணமும் இல்லை—எந்தக் காரணத்தையும் அவர்கள் கண்டதில்லை! இந்த நம்பிக்கைகளுக்கு எந்த உண்மையும் கிடையாது! இந்த நம்பிக்கைக்குத் தப்பான பிரச்சாரம், திரித்துக்கூறல், உயர்வு படுத்திக் கூறல், பொய் ஆகியவை பக்கபலமாக வைக்கப்பட்டன. இந்தத் தவறுகள் மிகைப்படுத்திக்கூறியன, பொய்க்கூற்றுகள் ஆகியவைகளின் பின்னால் 'அற்புதம்' என்பதன் மீது ஆசை ஆர்வம் உறைந்துகிடந்தது. அற்புத நிகழ்ச்சிகள், ஆச்சரிய சம்பவங்களை விரிந்த கண்களுடன், திறந்த வாய்களுடன் அறியாமை உள்ளங்களிலே நர்த்தனம் புரிய மக்கள் கவனித்துக் கேட்டனர்!

அறிவுள்ள எவருக்கும் இந்த மூடநம்பிக்கை எப்படி ஏற்பட்டது என்ற வரலாறு தெரியும் என்பதோடு, பல நூற்றாண்டுகளாகப் 'புனித பைபிளா'ல் இதன் உண்மை நிலைநாட்டப்பட்டு வருவதும் தெரியும். புது ஆகமம் போலவே (New Testament) பழைய ஆகமத்திலும் (Old Testament) கெட்ட ஆவிகள், பேய்களைப்பற்றிய மேற்கோள்கள் நிறைந்து கிடப்பதும், கிருஸ்துவே கெட்ட ஆவிகள், பேய்களில் நம்பிக்கை யுடையவரென்பதும், அவருடைய முக்கிய வேலைகூட ஆண் பெண் அடங்கிய மனித ராசிகளின் உடல்களிலிருந்து பேய்களை விரட்டுவதாகக்கூறப்பட்டிருப்பதும் அறிவுள்ள ஒவ்வொருவனுக்கும்தெரியும். புது ஆகமப்படி கிருஸ்து பேயின் தூண்டுதலுக்கு ஆளானதுமட்டுமல்ல,சாத்தானால் கோயிலின் உச்சிக்கும் தூக்கிச் செல்லப்பட்டாரென்பதும் தெரியும். புது ஆகமம் கடவுளால் கூறப்பட்டதென்றால், இப்பேய்கள், குட்டிச்சாத்தான்கள் உண்மையாகவேயிருந்திருக்கும் மனித உயிர்களைத் தங்கள் வசப்படுத்தியிருக்கும் என்பதை நான் ஒப்புக்கொள்கிறேன். கெட்ட ஆவிகள் இருந்ததில்லையென்று மறுப்பது, பேய் என ஒன்று இல்லையெனக் கூறுவது புது ஆகமத்தின் உண்மையை மறுப்பதாகும். குட்டிச்சாத்தான்கள் இல்லையென்று மறுப்பது, இயேசு கிருஸ்துவின் வார்த்தைகளை மறுத்துப் பேசுவதாகும்.

இந்தப் பேய்கள் இருந்ததில்லை, இவைகளால் நோய் நொடிகள் ஏற்பட்டதில்லை, இவைகள் கேடு விளைவிக்க வில்லை யென்றால் கிருஸ்து அறியாதவர், மூடநம்பிக்கைக்கு இரையானவர், மதிகெட்டவர், ஏமாற்றும் எண்ணங்கொண்டவர் என்றோ அல்லது புது ஆகமம் அவர் கூற்றுகளின், உண்மைப் பிரதிபலிப்பு அல்லவென்றோதான் கருதவேண்டும்.

பேய்களின் மீது நமக்குள்ள நம்பிக்கையை விட்டு விடுவதென்றால் பழைய, புதிய ஆகமங்களின் பால் கொண்டுள்ள பக்தியையும் விட்டுவிடவேண்டும்-கிருஸ்துக்குத் தெய்வீகத்தன்மையிருப்பதாகக் கருதுவதையும் விட்டு விடவேண்டும்.

கெட்ட ஆவிகள் இல்லை யென்று மறுப்பது அடியோடு கிருஸ்து வேதத்தின் அடிப்பீடத்தையே அழிப்பதாகும். இதைத்தவிர வேறுவழியில்லை. சமரசம் சாத்திய மற்றது. பேய்களை, கெட்ட ஆவிகளைவெளியேற்றுவதுபற்றிப் புதுஆகமத்தில் கூறப்பட்டிருப்பவைகள் எல்லாம் தவறு என்றால், வேதபுத்தகம் எந்த விதத்தில் உண்மையானதாகும்? (வரும்)

நினைவு நாள்.

சிதம்பரம் திராவிடர் கழகத் தலைவர் தோழர் கிருட்டினசாமியவர்களின் வாழ்க்கைத் துணைவியார் தோழியர் தனராசு அவர்கள் அண்மையில் இயற்கையடைந்ததையொட்டி 15-4-48-ம் நாளை நினைவு நாளாக அமைத்து இரங்கல் கூட்டம் நடந்தது. பலரும் தத்தம் வருத்தத்தைத் தெரிவித்துக்கொண்டனர்.

குடி அரசு

17—4—48 சனிக்கிழமை.

சுகப்பிரசவமாகவேண்டும்!

★

மதகுருமார்களுடைய சுகவாழ்வுக்காகவே, மற்றவர்களுடைய வாழ்க்கை எப்படிக் கசக்கிப் பிழியப்படுகிறதோ அதுபோலவே, ஆண்களுடைய சுயநலச் சுகவாழ்வுக்காகவே ஆண்களைக் காட்டிலும் அதிகத் தொகையினரான பெண்களின் வாழ்க்கையும் கசக்கிப் பிழியப்பட்டு வருகிறது.

மதகுருமார்கள் மற்றவர்களின் உழைப்பை உறிஞ்சுவதற்கு, எப்படி ஆண்டவன்முன் நிற்க, சாஸ்திரம் வழி வகுக்க, சட்டம் பாதுகாக்கிறதோ, அதைப்போலவே பெண்களின் வாழ்வை ஆண்கள் பலி கொள்ள, ஆண்டவன் துணை புரிய, அவர் வழிவந்தவர் வகுத்த சாஸ்திரம் வழி செய்ய, சட்டம் அதைப் பாதுகாத்து வருகிறது.

அநாதியான கடவுளும் அநாதியான சாஸ்திரமும் மதப்பிடுங்கலுக்கு எப்படி அனாதிகால ஆதாரமோ? அப்படித்தான் பெண்ணடிமைக்கும் அனாதிகால ஆதாரம்.

மோட்சம் நரகம் என்று கூறி மத முடிச்சுமாறிகள் எப்படி மற்றவர்களைப் பயமுறுத்துகிறார்களோ, அப்படியே பதிவிரதை, விபசாரம் என்று கூறிச் சமூகச் சழக்கர்கள் பெண்களைப் பயமுறுத்துகிறார்கள்.

"மோட்சமாவது, நரகமாவது! கடவுளுக்கு ஏன் ஒரு தரகன்? மதகுருவே! உன் மதத்தை விட்டொழி" என்றால், சுரண்டும் மதகுரு சும்மாயிருந்தாலும், சுரண்டக் கொடுக்கும் தோழனே துடுக்காக நம்மீது பாய்வதைக் காண்கிறோம். அதைப்போலவே, பெண்கள் நலம்பற்றிப் பேசும்போது பெண்களிடமிருந்தே அதற்கு எதிர்ப்பு.

மக்கள் வாழ்வு மக்கள் வாழ்வாக மாண்புற வேண்டுமானால், மக்களில் சரி பகுதியினரான பெண்கள் வாழ்வு பெண்கள் வாழ்வாகப் பீடுபெற வேண்டுமானால், அவைகளுக்கு முட்டுக் கட்டையாக, முழு எதிரியாக கையாளப்பட்டுவரும் கடவுள்களும், சாஸ்திரங்களும், உடைத் தெறியப் படவேண்டும், கொழுத்தி எரிக்கப் படவேண்டும். இதுநாம் நெடுநாளாகவே வற்புறுத்திக்கூறி வருவதாகும்.

மக்களுக்குள் நான்தான் பல ஜாதிகளை உண்டாக்கினேன் என்று கூறும் கடவுளோ, அதற்கு ஆதாரமான சாஸ்திரங்களோ, பெண்கள் இழிந்த பிறவிகள் என்று பேசும் கடவுளோ, அதற்கு ஆதாரமான சாஸ்திரங்களோ அழிக்கப் படாமல், ஒழிக்கப்படாமல் அவைகள் பெருமைக் குரியதாய் வழிபாட்டுக் குரியதாய்ப் போற்றப் பட்டு வரும் நிலைமை இருந்தால், எப்படி மக்களுக்குள் ஒற்றுமை காணமுடியும்? எப்படிப் பெண்கள் இழிநிலை ஒழிந்து விட முடியும்?

இப்படிப் பட்ட கடவுளும் சாஸ்திரங்களும் ஒழிக்கப் படாமல் அவைகள் அப்படியேயிருக்க, மக்களுக்குள் புகுத்தப்பட்டிருக்கும் உயர்வு தாழ்வைப் போக்குவதற்கும், பெண்ணடிமையை நீக்குவதற்கும் சட்டங்கள் மட்டும் இயற்றுகிறோம், அதுவும் சட்டத்தைக் கொஞ்சம் சீர்திருத்துகிறோம் என்றால், அது எந்த அளவுக்கு எப்படிப்பயனைக் கொடுத்துவிட முடியும்? இதைச் சீர்திருத்த வாதிகள் என்கிற போர்வையைப் போட்டுக்கொள்ள முன்வருபவர்கள் எண்ணிப் பார்க்க வேண்டும்.

இன்று இந்திய யூனியனை ஆளுவது ஒரு மதமற்ற சர்க்கார் என்று டம்பமாகப் பேசிக்கொள்ளப்பட்டாலும் கூட, அது இந்து மத ராமராஜ்ஜிய சர்க்கார்தான் என்பதும், மற்ற மதங்களைப் பற்றிக் கவலைப்படாமல், அவைகளின் வளர்ச்சிக்கு உதவி செய்யாமல் இருப்பதற்கு, அப்படி ஒரு சாக்காகக் கூறப்பட்டு வருகிறதென்பதும், இந்து மதத்திற்கு, அதனுடைய நாசமாய்ப்போன கொள்கைகளுக்குச் சிறு கேடு வந்தாலும் இந்தச் சர்க்கார் கண் கலங்கிக் கதறிப் பதறித் துடிதுடிக்கும் என்பதும் எல்லோரும் அறிந்ததேயாகும். இன்னும் சொல்லப்போனால் இந்துமத அடிப்படையில் உண்டானதுதான் இந்த ஒரு கட்சிச் சர்க்கார்.

இந்தச் சர்க்காரில் சட்டமந்திரியாக இருக்கும் தோழர் அம்பேத்கார் அவர்கள், "இந்துச் சட்டத் திருத்த மசோதா" என்று ஒரு மசோதா கொண்டுவந்து, அதை செலக்ட் கமிட்டிக்கு அனுப்பியிருக்கும் செய்தியைத் தோழர்கள் பத்திரிகைகளில் படித்திருக்கலாம்.

45, 46க்கு முன்னாலிருந்த அம்பேத்கார் வேறு. 47க்குப் பின்னாலிருக்கும் அம்பேத்கார் வேறு. இதை இந்த நேரத்தில் தோழர்கள் நினைவுபடுத்திக் கொள்ள வேண்டும். அன்றைய அம்பேத்கார் ஒரு பார்ப்பன வீட்டில் சாதாரணத் தண்ணீர் கிடைக்கப்பெறாமல், பஞ்சமன் என்ற காரணத்தால் தன் ஒப்பற்ற குழந்தையையே பலியாகக் கொடுத்தவர்; இன்றைய அம்பேத்கார் பாராளும் வர்க்கத்தினரில் ஒருவர் என்ற காரணத்தால், பார்ப்பன அம்மையார் காதலித்துக் கடிமணம் புரியும் கட்டிளம் பருவத்தினர். இந்த வேறு பாட்டை நாம் கூறவில்லை. அன்றிருந்த அம்பேத்கார் அக்கிரகாரத்தால் வெறுக்கப்பட்டவர், சி. பியால் சினந்து பேசப்பட்டவர்; பொறுப்பான பதவியை இப்புல்லருக்குக் கொடுக்கலாமா என்று புரோகிதக் கூட்டத்தால் தூற்றப்பட்டவர். இன்றைய அம்பேத்கார் அக்கிரகாரத்துக்கும்கூட சட்டம் வகுத்துத் தரவேண்டிய நிலையில், அக்கிரகாரப் பார்ப்பார்களால் ஒப்புக்கொள்ளப்பட்டவர். அதாவது ஆளவந்த காங்கரஸ்காரர்களால் அங்கீகாரம் செய்யப்பட்டவர். இன்று அவர் பேசுகிறார் என்றால் இந்திய யூனியன் முழங்குகிறது, நேரு சர்க்கார் கர்ஜிக்கிறது என்று அர்த்தம். அன்று அவர் பேசியிருந்தால் அது "அம்பேத்கார் ஆலாபனம்," "அம்பேத்கார் புலம்பல்" என்று பொருள். இந்த வேறுபாட்டைத்தான் இங்கு நாம் குறிப்பிடுகிறோம்.

இன்றைய அம்பேத்கார் கொண்டுவந்த இந்துச் சட்டத் திருத்த மசோதாவில் முக்கியமான

பிரச்னைகளாக விளங்குவன இவை.

1. இதுவரை இருந்து வந்த சொத்துரிமை பாத்தியதை இருக்கிறதே அதை ஒழிப்பது. இனிமேல் குடும்பச் சொத்தில் ஆண்பிள்ளைகளுக்கே உரிமை என்பதும் அல்லது பெண்பிள்ளைகளுக்கே (இசை வேளாளர்வகுப்பு, மலையாள மருமக்கட் தாயம் போல) உரிமை என்பதும், மகனில்லாது போனால் பொதுக் குடும்பச் சொத்தை மற்றொரு சகோதரனின் ஆண்பிள்ளை அனுபவிப்பது என்கிற அனந்தர வார்சுரிமை பேசுவதும் அர்த்தமற்றவை என்று ஒழிக்கப்பட்டுவிடும்.

(2) ஆண்பிள்ளைகளைப் போலவே பெண்பிள்ளைகளுக்கும், பெண்பிள்ளைகளைப் போலவே ஆண்பிள்ளைகளுக்கும் பங்கு உரிமையை நிலைநாட்டல்.

(3) விற்கவோ, பிறருக்குக்கொடுக்கவோ உரிமையில்லாமல் அதனுடைய பலனை மட்டும் சாகும் வரை அனுபவித்துவரும் பெண்களுக்கு, இனிமேல் அச்சொத்துக்களைச் முழு உரிமையுடையதாக ஆக்குதல்.

(4) கலியாணம், சுவீகாரம் ஆகிய விஷயத்தில் சாதிவேறுபாடு தடையாக இருக்கிறதே அதை ஒழிப்பது. இனிமேல் சட்டத்தின்படி யார் எச்சாதியில் வேண்டுமானாலும் கலியாணம் செய்து கொள்ளலாம், சுவீகாரம் எடுத்துக் கொள்ளலாம். அதனால் அவர்களின் சொத்துரிமையை அழிக்க முடியாது.

(5) ஒரு மனைவிக் கொள்கை. அதாவது கலியாணம் செய்து கொண்ட ஒருமனைவி உயிரோடிருக்கும் போது, எத்தனை பெண்களை வேண்டுமானாலும் ஒரு ஆண் மேலும் மேலும் கலியாணம் செய்து கொள்ளலாம் என்றிருக்கிறதே அதை ஒழிப்பது.

(6) கல் ஆனாலும் கணவன் என்று, கற்பு என்ற வாய்ப்பூட்டைப் போட்டு, கணவன் பெருநோயுடையவனாக இருந்தாலும், கூடிவாழ்வதே தலைவிதி என்றிருக்கிறதே அதை ஒழிப்பது. விரும்பினால் கூடிவாழலாம், விரும்பாவிட்டால் பிரிந்து விரும்பிய மற்றவரோடு கூடிவாழலாம்.

(7) பெண்களுக்குப் பங்கு கொடுக்கப் படுவது போலவே தாயின் சீர்தனச் சொத்தில் இனி ஆண்களுக்கும் பங்குரிமையுண்டு.

(8) பார்ப்பனர்கள் போன்ற சாதிக்காரர்கள், கலியாணங்களில் வாங்கும் வரதட்சணையின் மீது மாப்பிள்ளையின் பெற்றோர்களுக்கு இருந்த உரிமை அழிக்கப்படும். மணமகளுக்கே வயது வந்தவுடன் அதில் பாத்தியதை.

(9) இன்னும் இவை போன்ற சில மாறுதல்கள் "வைப்பாட்டிகள்" விஷயத்திலும் "மனைவியின் ஜீவனாம்ச" விஷயத்திலும் செய்யப் பட்டிருந்தாலும், விவாகரத்தே செய்ய முடியாத வைதீகவிவாகத்தைத் தருந்த காரணங்களின் மீது ரத்து செய்யும் உரிமையை அளித்தல் என்பதை முக்கியமாகக் குறிப்பிடவேண்டும்.

இவைகளிலிருந்து, இந்துப் பெண்களுக்குச் சொத்துரிமையும், விவாகரத்துரிமையும் இந்த மசோதாவினால் கொடுக்கப்படுகிறது என்பது தெளிவாகும். இம்மசோதாவை நாம் முழுமனதுடன் வரவேற்கிறோம். இதைக் கொண்டு வந்த அம்பேத்காரவர்களைப் பாராட்டுகிறோம்.

ஆனால் இந்த மசோதா செலக்கமிட்டியிலிருந்து எந்த உருவத்தோடு திரும்பிவரும்? திரும்பி வருமா? திரும்பி வராமலே போய் விடுமா? செலக்ட்கமிட்டி என்கிற கருப்பை எந்த வேலையைச் செய்யுமோ? யார் கண்டது?

மசோதாவிலுள்ள அங்கங்களைக் குறைக்காமல், வேறுபடுத்தாமல் செலக்ட்கமிட்டிஅப்படியே பிரசவித்து விட்டாலும்கூட, சட்டத்தினால் கொடுக்கப்பட்ட உரிமையை அனுபவிக்கவிடாமல், கடவுள்களாலும் சாஸ்திரங்களாலும் பயமுறுத்தப்படுமானால் - ஆனால் என்ன? பயமுறுத்தப்படுகின்றதே அதை ஒழிப்பதற்கு இந்தத் திருத்தச் சட்டத்தால் எப்படி முடியும்? இம்மசோதா பயன்பட வேண்டுமென்று ஆசைப்படுகிறவர்கள் இதைச் சிந்திக்க வேண்டு மல்லவா? மேலும் மசோதா பெருவழக்காக வரவேண்டுமானால் வேறு சில சலுகைகளும் சட்டத்தின் மூலம் கொடுக்கப்படவேண்டுமல்லவா? சிந்தித்துப் பார்ப்பார்களா?

இத்தகைய, நியாயமான ஒரு மசோதா எப்படிப் பார்ப்பனர்களின், அதுவும் பார்ப்பன அம்மாமிகளின் எதிர்ப்புக்குக், கண்டனத்துக்கு ஆகாமல், சங்கராச்சாரிகள் உயிரோடிருக்கும்போது நிறைவேறிவிடும் என்று தோழர்கள் எவரேனும் சந்தேகப்பட்டாலும் சந்தேகப்படலாம்.

இம்மசோதா நிறைவேறுவதினால், பார்ப்பனர்களுக்கு நன்மை என்று பார்ப்பனர்கள் கண்டு கொள்ளுவார்களானால், அக்கிரகாரம் இதைக் கண்டு அலறாது. அம்மாமிகளும் வேஷம் போடமாட்டார்கள். சங்கராச்சாரிகளும் சல்லடம் கட்டமாட்டார்கள் என்கிற உண்மையைத். தோழர்கள் எண்ணிப்பார்க்க வேண்டும்.

உண்மையாகவே இந்தத்திருத்த மசோதாவை அலசிப்பார்த்தால், நம் மாகாணத்தைப் பொறுத்தவரையில், திராவிடர்களைக்காட்டிலும் பார்ப்பனர்களே மிகுந்த நன்மையை அடைவதற்கும், அவர்களின் நடத்தை சட்டபூர்வமாக அங்கீகாரம் ஆவதற்கும்ஆன தன்மைதான் காணப்படுகிறதெனவும், இது நிறைவேறி அமுலுக்கு வருமானால், பார்ப்பனர்கள் திடீர் திடீர் என்று சதாசிவங்களைப் போலப் பெரும் செல்வவந்தர்களாக முடியுமெனவும், இந்துமதத்தில் பிணைக்கப்பட்டிருக்கும் திராவிடர்கள் ஏமாந்த சோணகிரிகளாகத்தான் இருப்பார்கள் எனவும் நாம் எண்ணினாலும் கூட, இந்த மசோதாவை முழுமனதுடன் வரவேற்கிறோம்.

வரவேற்பிலேயே மற்றொன்றையும் நாம் நினைவுபடுத்துகிறோம். மசோதா அமுலுக்கு வருமானால், எல்லோரும் சுப்பராயன்களாக ஏன் ஆகக்கூடாது என்று இந்த நாட்டுத் திராவிடச் செல்வவந்தர்கள் வீட்டுத் திருக்குமாரர்கள் எண்ணிவிடக் கூடாது! இலை முள்ளில் பட்டாலும் முள்ளு இலையில் பட்டாலும் கெடுதல் இலைக்கே தவிர முள்ளுக்கு இல்லை என்பதை மறவாதீர்கள்!

சட்டம் நிறைவேறாத முன்பே அதன் விளைவைக் குறித்துக் கூறுவது, பிள்ளை பிறவாததின் முன்பே பிள்ளைக்குப் பெயர் வைப்பதைக் குறித்துக் கூறுவது போல்

நடக்க விருப்பவை.

களங்காணியில் (நாமக்கல்லையடுத்தது) 23—4—48 காலை 10-மணிக்குப் பெரியாரவர்கள் தலைமையில் தோழர்களான பாப்பாத்தி—பாலசுப்பிரமணியம் திருமணம்.

மாலை 6-மணிக்கு தி. க. சார்பில் பொதுக்கூட்டம். பெரியாரவர்கள் பேசுவார்கள். ஒலிபெருக்கியுண்டு.

ஆகும் என்றும், நம் செய்கையை அவசரப்பட்ட செயல் என்றும் யாரேனும் எண்ணுவார்களானால் அவர்களுக்கு நாம் கூறுவது இது தான். நீங்கள் பார்ப்பனர்கள் போக்கை உணராதவர்கள்.

எப்படியிருப்பினும் இந்தத் திருத்த மசோதா உருப்படியாக சுகப்பிரசவமாகிப் பயன்படும் அளவுக்குப் பயன்படட்டும்!

பரீட்சைக்குத் தடை.

★

மத்திய திராவிட மாணவர் கழகத் தலைவர் தோழர் மதியழகன் அவர்கள், இந்த ஆண்டில் பி. ஏ. பரீட்சை எழுதுவதிலிருந்து அண்ணாமலைப் பல்கலைக் கழக வைஸ்—சான்ஸலர் தோழர் ரத்தினசாமி அவர்களால் தடைப்படுத்தப்பட்டிருக்கிறார். பரீட்சை எழுதக்கூடாதென்பதற்கு ஏதாவது தகுந்த காரணம் கூறியிருக்கின்றாரா என்றால் அப்படியும் ஒரு காரணம்கூட காட்டவில்லை என்று அறிகிறோம். தோழர் மதியழகன், பஞ்சாங்கத்தையும் தருப்பையையும் பாதுகாப்பாகக் கொண்டு ஊரார் உழைப்பை உறிஞ்சிய உஞ்சிவிருத்திக் கூட்டத்தைச் சேர்ந்தவரல்லஎன்பதையும், வயிற்றையும் வாயையும் கட்டி எப்படியாவது நம்மபிள்ளை படிக்கவேண்டும், படித்துப் பட்டம் பெறவேண்டும், என்ற ஆசையால் உடல் வருந்த உழைத்து, உழைத்த பயனை பொறுக்கிக் கொடுக்கும் பெற்றோர்களையுடைய உழைப்பாளி இனமான திராவிட இனத்தைச் சேர்ந்தவர் என்பதையும், அதாவது இந்தப் பரீட்சை எழுதுவதற்காக கஷ்டப் பட்டுழைத்த உழைப்பிலிருந்து பல ஆயிரம் ரூபாய்களையும் பல வருஷங்களையும் செலவு செய்தவர் என்பதைச் சிறிதுநேரம் நம் மதிப்பிற்குரிய வைஸ்சான்ஸலர் அவர்கள் எண்ணியிருப்பாரானால் இந்த அழிவு வேலையைச் செய்ய அவர் சற்று பின்வாங்கியே இருக்கவேண்டும்.

காரணமே இல்லாமல் அல்லது காரணம் கூறாமல் ஒரு வைஸ்சான்ஸலர் ஒரு மாணவரை பரீட்சை எழுதுவதைத் தடை செய்திருக்கின்றார் என்றால் அதற்கு என்ன காரணம்? அம்மாணவர் செய்த குற்றம் என்ன? அவர் திராவிட மாணவர் கழகத் தலைவர் என்கிற குற்றவாளியே தவிர வேறு என்ன காரணம் சொல்லுவதாயிருந்தால் சொல்ல முடியும் என்று கேட்கிறோம்.

5, 6, மாதங்களுக்கு முன்பு அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் காங்கரஸ் கட்சியைச் சேர்ந்த சில மாணவர்கள், "தேசீயக் கொடியைக் கொளுத்தி விட்டார்கள் திராவிட மாணவர்கள்" என்ற பொய்யான வதந்தியைக் கிளப்பி, திராவிட கழகக்கொடியை இறக்கப் பலவந்த முயற்சி செய்ததையும், அதற்கு அங்குள்ள பார்ப்பன ஆசிரியர்களே உடந்தையாக இருந்ததையும், அதனால் இருதரப்பாரும் கைகலந்து, காயம்பட்டு, காலித்தனம் செய்ததையும், அன்றிரவு நடுச் சாமத்தில், பார்ப்பன ஆசிரியர்களையும் போலிசையும் பாதுகாப்பாகக் கொண்டு, மூடியிருந்த கதவுகளைத் திறக்கச் செய்து திராவிட மாணவர் கழகத்தைச் சேர்ந்த மாணவர்களை அடித்து இம்சித்து, அம்மணமாக்கிக், கத்தியால் குத்தி, கடைகெட்ட மிருகங்களிலும் கேவலமாக நடந்து கொண்டதையும் கண்டித்து நாம் அப்போதே எழுதியிருந்தோம்.

அவ்விருதரப்பு மாணவர்கள் மீதும் போலிசார் வழக்குத் தொடர்ந்திருக்க, காங்கரசின் ஏகபோகச் சர்வாதிகாரப் போக்கினால், காங்கரஸ் கட்சி மாணவர்கள் மீதுள்ள வழக்கை போலிசார் வாபஸ் வாங்கிக் கொண்டுவிட, திராவிட மாணவர் கழகத்தைச் சேர்ந்தவர்கள் மீதுமட்டும் வழக்கு நடந்து கொண்டிருக்கும் காலத்தில், இந்த அக்கிரமத்தில் என் பங்கு என்ன குறைச்சலா என்று கேட்பதைப்போல தோழர் ருத்தனசாமி யவர்கள் தடை உத்தரவைப் போட்டிருக்கிறார்கள்.

இந்தத் தடை உத்தரவு, நடந்து கொண்டிருக்கும் வழக்கையும் பாதிக்கும் என்பதைத் தோழர் ருத்தனசாமி யவர்கள் அறிந்திருக்க வேண்டும். அறிந்தே இந்த அட்டூழியத்தை—அவராலும் நீக்க முடியாத நிலையில் செய்திருக்கின்றார் என்றால் திராவிடர்கள் மன்னிக்க முடியாத ஒரு மாபாதகத்தைச் செய்திருக்கின்றார் என்று சொல்வதைத் தவிர வேறு நம்மால் என்னசொல்ல முடியும். ஏதோ நடப்பது நடக்கட்டும். தீர்ப்புக் கூறும் நாள்உண்டு என்பதிலே அவர்அசைக்க முடியாதநம்பிக்கை உடையவர் என்பதை நாம் அறிவோம்.

இது சில்லரைத்தொல்லை ஆனால் இயற்கையேதான்.

★

ஈரோடு, 15—4—48.

(நம் தனி நிருபர்)

இன்று தலைவர் பெரியாரவர்களைச் சந்தித்து, இயக்கத்தில் அபிப்பிராய பேதம் என்று பேசப்படுவதைக் குறித்துக் கேட்ட கேள்வியும், அளித்த பதிலும் இவை.

கேள்வி:— தங்களுக்கும், தோழர் சி. என். அண்ணாதுரையவர்களுக்கும் ஏதோ அபிப்பிராயபேதம் இருப்பதாகவும், தலைவர்களுக்குள் ஏற்பட்ட அக்கருத்து மாறுபாடு தூத்துக்குடி மாநாட்டிலாவது தீரவேண்டும் என்றும் சிலர் எழுதியும் பேசியும் வருகிறார்களே! இதைப்பற்றிய தங்களின் கருத்தென்ன?

விடை:— இது ஏதோ ஒன்றை எதிர்பார்த்துச் செய்யப்படும் தந்திரப் பிரசாரமே தவிர மற்றப்படி இது கவனிக்கத்தக்கதல்ல. ஏன் என்றால் ஒரு கட்சிக்கு ஒரு தலைவர்தான் இருக்க முடியும். மற்றவர்கள் அக்கட்சியிலிருக்கின்றார்கள் என்றால், அவர்கள் பின்பற்றுகிறவர்கள் என்று சொல்லப்படுபவர்களே தவிர,

வருந்துகிறோம்.

முரசொலி ஆசிரியர் தோழர் கருணாநிதியவர்களின் வாழ்க்கைத் துணைவியாரும், சிதம்பரம் இசைவாணர் ஜெயராமன் அவர்களின் சகோதரியுமான தோழியர் பத்மாவதியவர்கள் நமது இளம் வயதில் இம்மாதம் 12-ல இயற்கையடைந்த செய்தி கேட்டு மிக வருந்துகிறோம்.

இயற்கையின் கொடுமையையுணர்ந்துள்ள தோழர் கருணாநிதியவர்கள், தமக்குத் தாமே ஆறுதல் செய்து கொண்டு தெளிவடையவேண்டுமே ஒழிய பிறர் ஆற்றுவது ஆறுதலாகாது என்பதைச் சிந்தித்துத் தெளிந்த உறுதி படைத்தவர். அவருக்கும் அவரது குடும்பத்தாருக்கும் நமது ஆழ்ந்த வருத்தத்தைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

மூடப் பழக்க வழக்கங்கள்.

"வி. பி. சண்முகம்"

★

1. "கழுதை கனைக்கிறது, காரியம் சித்தியடையும்" என்றால் கழுதை கனைப்பதற்கும், காரியம் சித்தியடைவதற்கும் என்ன தொடர்பு இருக்கிறது? கழுதை எதற்காகக் கனைக்கிறது? பெண் கழுதையைக் கண்டு கனைக்கிறது. உன் காரியத்தைக் கண்டா கனைக்கிறது? அப்படியாயின் உன்காரியமா பெண் கழுதை? இதற்கெல்லாம் பதில் சொல்ல இயலாது. இவைகளெல்லாம் மூடப்பழக்கவழக்கங்களே.

2. ஒரு ஊரில் ஒரு ராஜா இருந்தானாம். போகும் வழியில் இறந்துகிடந்த கழுதையின் மயிரைப் பார்த்து, 'அழகாக இருக்கிறது' என்று நான்கு மயிரைப் பிடுங்கிக் கொண்டு வந்தானாம். அவனுடன் வருபவர்கள் எல்லோரும் இதில் ஏதோ அனுகூலம் இருப்பதாக எண்ணி ஆளுக்கு ஒருபிடி மயிராகப் பிடுங்கிச் செத்த கழுதையை மொட்டையாக்கி விட்டார்கள் என்றால், இந்த முட்டாள்தனத்தை எங்கே சொல்லுவது.

3. 'கதவுக்கு நாமம் போடு, கதவுக்கு நாமம் போடு' என்று ஒரு சமயம் கதறினார்கள். எதற்காக? ஏதோ இரவில், நாமம் போடாத வீட்டில் சப்தம் ஏற்படுமாம். வீட்டில் உள்ளவர்கள் கதவைத் திறந்தால் இறந்துவிடுவார்களாம். திறக்காவிட்டாலும் இறந்துவிடுவார்களாம். என்னே போலிக்கூற்று? இதைக்கேட்டு எல்லா வீட்டிலும் நாமம் போட்டார்களேயொழிய இது இப்படிஏற்பட்டதா? எங்கு? என்பவைகளையெல்லாம் தெரிந்து கொள்ளவில்லை. இவைகளெல்லாம் நாமதாரிகளின் தந்திரம் என்று உணர்ந்தார்களில்லை. எல்லோரையும் நாமம்போடச் செய்து விடலாம் என்று இத்திட்டத்தைக் கொணர்ந்தார்கள் போலும்.

4. இதுபோல்தான் இன்னொன்று. உடுமலைத் தாலூக்காவைச் சேர்ந்த சோமாரப்பட்டி என்கிற ஊருக்கும் கொங்கல் நகரம் என்றதற்கும் இடையில் ஒருவன், தன் காட்டில் ஒன்றும் விளையாதது கண்டு ஒருதந்திரம்செய்தான். தன் கனவில் வாழைத்தோட்டத்து அய்யன் வந்து 'நான் உன் காட்டுக்கு வந்து விட்டேன்' என்று சொன்னதாகவும், அங்கு சில கண் தெரியாதவர்களுக்கு அவ்வய்யன் கண் கொடுத்ததாகவும், இன்னும் பெரிய பெரிய இயலாத வைத்தியத் தொழில் புரிந்ததாகவும் பத்திரிகையில் விளம்பரம் செய்து விட்டான். பின் அவ்விடத்தில் ஆயிரக்கணக்கான கும்பல்களும் கடைகளும் குவிந்துவிட்டன. எப்படி யோசனை? பின் இன்னொரு புளுகும் ஏற்படுத்திவிட்டார்கள். அஃது யாதெனில் அங்கு கடைக்காரர்கள் பொருள்களைக் கொடுத்துவிட்டுப் பணம் கேட்க மாட்டார்களாம். வாங்கியவர் தானாகவே பூஜைகளை முடித்துவிட்டு வந்து எப்பொழுதோ கொடுத்துவிடவேண்டுமாம். கொடுக்காமல் வந்தால் அவ்வய்யன் அப்பொருள்களைப் பாம்பு உருவம் பண்ணிவிடுவாராம். இப்படிக் கொண்டுவந்து யாருக்காவது பாம்பு ஆகிஇருக்கிறதா? இல்லை. அது சொல்லக் கேள்வி. அங்ஙனம் ஏன் செய்து பார்க்கவில்லை? 'அப்படியாகிவிடுமோ' என்ற பயந்தான். இவையெல்லாம் அறியாமையே. 'கல்லைச் சேர்த்துக் கட்டி அழு, குழந்தை உண்டாகும்' என்ற மூடக்கொள்கையுடைய உலகம், காந்தி இறந்த இடத்தைக் குழியாக்கி விட்டார்கள் என்றால் என்ன ஆச்சரியமிருக்கிறது. இன்னும் ஆழமான கிணறும் தோண்டக்கூடும்.

5. செப்பு மணைய மாட்டாத குவயன், தாளிக்கு அச்சாரம் வாங்கினானாம்! அதுபோல் வீட்டுக்கே போதிய அளவு சாப்பாட்டுக்கே கொடுத்து உதவமுடியாதவன், பழனி ராமேஸ்வரத்திற்கு உண்டியல் போடுகிறானே. அது எதற்கு? கோவிலுக்காகப் போடுவதாக எண்ணுகின்றனர். 'நாயிக்குப் பெயர் முத்து மாலை' என்ற பழமொழிக்கேற்ப, கோயில் சொத்தை (அதாவது முட்டாள் உலகம் வயிறார உண்ணாது, தங்க நகைகள், காசுகள், பணங்கள், தான்யங்கள் இவைகளைக் கொண்டுபோய் உண்டியலில் சேர்ப்பவைகளைத்) தின்று, உட்கார்ந்த இடத்தை விட்டுப் பெயர முடியாது, தொந்தி பெருத்து, அதிகாரம் செலுத்தும் மடையர்களுக்குப் பெயர் 'தர்மகர்த்தா'வாம். இவர்களும் திருட்டுப் பூசாரிகளும் முதலில் தின்கிறார்கள். பின்கவர்மெண்ட் உத்தியோகஸ்தர்கள்தான் இருக்கிறார்களே! அவர்கள்தான் (Endowment Board Officer) தேவஸ்தான பரிபாலன சபையார். கோயிலுக்காக ஏற்படுத்திபிருக்கும் பியூன்கள் முதல் பெரிய ஆபீஸர்கள் வரை எல்லோருக்கும் பங்கு இருக்கிறது. இவைகளைப் பாமரர் சிந்திப்பதில்லை.

6. நிற்க, கரூர் தாலூக்காவில் பரமத்திக் கிராமத்தில் கோமாளி வலசு என்று ஒரு ஊர் இருக்கிறது. அதில் ஓர் பூசாரி, முதலில் ஒரு செல்லாக்காசுகூட இல்லாதவன் இப்பொழுது 400 எக்கர்பூமி வைத்திருக்கிறான். இவையெல்லாம் யாருடையது? மூளையில்லாத முட்டாள்களுடையது. எப்படிக் கிடைத்தது? அதுஓர்பெரிய கதை. அதாவது இருசகோதரர்களுக்கு நிலத்தகராறு ஏற்பட்டால் ஒருவன் சென்று சாமியார் பேருக்குத்தன் நிலத்தை எழுதிவைத்து விடுவது.

தலைவர்கள் என்று சொல்லப்படுபவர்களிடம் அபிப்பிராய பேதம் கொண்டவர்களாக இருக்க முடியாது. இயக்கத்தில் உள்ள எவருக்கும் எனக்கும் "அபிப்பிராய பேதம் உண்டு" என்றால் அது எங்கள் சொந்த விஷயமாகத்தான் இருக்க முடியுமேதவிர, இயக்கத்தைப் பற்றி அபிப்பிராயபேதம், இயக்கத்தில் இருப்பவர்களுக்குள் இருக்க முடியாது. இயக்கத்தில் தலைவன் என்கிற தன்மையில் என்னோடு மாறுபட்டவர்கள் என்பவர்களுக்கும், இயக்கக் கொள்கையில் அபிப்பிராய பேதம் கொண்டவர்கள் என்பவர்களுக்கும் இயக்கத்தில் இடமிருக்க முடியாது. அப்படி ஒருவர் இருந்து கொண்டு தங்களை இயக்கக்காரர்கள் என்று சொல்லிக் கொள்வதும், வேறு ஒருவரால் அப்படிச் சொல்லப்படுவதும், வேறு சொந்தக்கருத்தை லட்சியமாய்க் கொண்டதாக இருக்க முடியுமே தவிர, இயக்க சம்பந்தம் பற்றியதாக இருக்க முடியாது. ஆகவே இப்படிப்பட்ட அதாவது திராவிட கழக இயக்கத்திற்கு ஒரு நல்ல கிளர்ச்சியும் எழுச்சியும் ஏற்பட்டு மக்கள் ஆதரவைப் பெற்று வளர்ச்சி அடைந்து கொண்டிருக்கிற சமயத்தில், சில நபர்கள் பெயர்களை உச்சரித்து, அவருக்குத் தலைவரோடு அபிப்பிராய பேதம், கொள்கையில் அபிப்பிராய பேதம் என்றெல்லாம் பிரசாரம் செய்யப்படுமானால், அது குறுக்கு வழியில் விளம்பரம் தேடிக்கொடுப்பதும், தன்னால் ஆன அளவுக்கு இயக்கத்துக்குத் தொல்லை கொடுப்பதும் ஆனகாரியமாய் இருக்கலாம் என்பதுதான் எனது தாழ்மையான கருத்து. இப்படிப்பட்ட சில்லரைத் தொல்லைகளையும் சமாளித்து நடந்தேற வேண்டிய நிலை நம் இயக்கத்திற்கு இருந்து வருகிறது என்பதுதான் இதன் கருத்து. இது எந்த இயக்கத்துக்கும் இயற்கையே.

ரோஜா முத்தையா

பின் சாமியாரின் ஆட்கள், மற்றொரு வனை அய்யன் திருவடிகளை அடையச் செய்து விடுவார்கள். அதன் பின் முதல்வனுக்கு ஆயுள் பரியந்தம் அவர் சாப்பாட்டுக்குக் கொடுப்பாரேயொழிய, நிலத்தைத் திருப்பிக் கேட்டால் 'இந்தக் கை வாங்கும் கையே யொழிய, கொடுக்கும் கைஅல்ல' என்று பதில் அளித்து விடுகிறானாம். ஒரு சமயம் ஒருவனைக் கொன்றதற்காகச் சாமியாரை அரஸ்ட் செய்ய வாரண்டுடன், சப் இன்ஸ்பெக்டர் வந்தார். எதனாலோ அரஸ்ட் செய்யாமல் சென்று விட்டார். இதைக் கண்டார்களா அறியாமை நிறைந்த மக்கள்? சுவாமியார் தன் சக்தியினால் அதை வென்றாரென்று, சுவாமியின் சக்தியைப் பெரிதும் பாராட்டினர். எப்படியிருக்கிறது உலகம்.

இன்னொன்றும் சுவாமியார் செய்வதாக அவ்விடத்திற்கு மக்கள் குழாங்கள் குழுமினர். அதாவது மருந்தில்லாது, தீராநோய்களைத் தீர்த்துவைக்கிறானாம் பூசாரி. அங்கு சென்றவர் பூசாரியுடன் நிலத்தில் வேலைசெய்ய வேண்டுமாம். வேலை முடியும்வரை சாமி சொல்லாதாம். நான்கு நாட்களுக்கப்புறம் வேலை தீர்ந்தவுடன், அவனுக்குச் சாமி வந்து, இன்ன வியாதி இருக்கிறது என்று சொல்லுவானாம். இப்படி அங்கு வந்தவர்களிடம் கூலியில்லாமலே வேலை வாங்கினால் வேலையாட்கள் எதற்கு? பணம் இல்லாமலே வேளாண்மை செய்யலாமல்லவா? இத்தந்திரத்தைச் சற்றும் மக்கள் எண்ணினாரில்லை. இன்னும் அநேக படிப்பாளிகளும் கூட அங்கு சென்று கொண்டிருக்கிறார்கள் என்றால் நம் மூடப்பழக்க வழக்கங்களை என்னென்பது? தவிர கடவுளை நம்பினோர், கைவிடப்படார்; கைமேல் பலனடைவார்' என்பது வீண்போகாது.

இதை நான் ஒருதடவை கண்கூடாகப் பார்த்தேன். ஈரோட்டைச் சேர்ந்த கொடுமுடி கிராமத்தில், ஈஸ்வரன் கோவிலில், ஓர் ஆட்டுவியாபாரி. எவ்வளவு அந்தணர் மறுத்துச் சொல்லியும் கேளாது, தன்செருப்புக்காணாமல் போய்விடுமென்று, கொஞ்சம் கண்ணுக்குத் தெரியும் படியாகச் சற்றுஉள்ளே வைத்து விட்டுப் போய்த்தானே தேங்காய் பழங்களை உடைத்துக் கடவுளை மிகவும், பயபக்தியுடன் தொழுது விட்டு வந்தான். அவ்வூர்க் கோவிலில் எப்பொழுதும் பார்ப்பனரே அவ்வேலைக்கு உரியவராம். இப்படியிருக்க அந்தச் சோம்பேறிப் பூசாரிகள் போய், மணியகாரனிடம் இவ்விசயத்தைச் சொல்ல அவனும் அதே குலத்தவனாகையால், அந்த ஆட்டு வியாபாரிக்கு என்றும் மறக்க முடியாத உதை கொடுத்து உபசரித்தான். ஏன்அங்கே

(6ம் பக்கத் தொடர்ச்சி)

யேறலாம்! என்று நீங்கள் உத்திரவிட்டு விடலாமே. அப்பொழுது நம்மைச் சூழ்ந்திருக்கும் தொழிலாளி என்ற பெயரும், நம்மைவிட்டு வெகு தூரம் ஓடியிருக்குமே!'' இம்மாதிரி நன்றாக விளக்கித் தீர்மானமும் கொண்டுவந்தார்கள்.

இது நாள் வரைக்கும் எந்தத் தொழிலாளர் சங்கமும் இதைக் கேட்கவில்லை. கேட்டு நடக்கவும் இல்லை. அம்மாதிரி கேட்டு நடந்திருந்தால், யுத்த காலத்தில் கொள்ளைலாபம் அடித்துச் சம்பாதித்த ரொக்கம், நம் போன்ற தொழிலாளரை இந்நேரம் முதலாளி ஆக்கிவிட்டிருக்குமே!

நாம் எதைச் சொல்லித்தான் என்ன பயன்? உடனே நம்மைச் சு. ம, 'கருப்புச் சட்டைக்காரன், நாஸ்தீகன் என்று தூற்றுவார்கள். நாம் சொல்வதில் ஏதாவது உண்மை இருக்கிறதா என்று சிந்திக்க மனம் வருவதில்லை. பொதுவுடைமைத் தோழர்களும் ரஷ்யக் கனவு காண்கிறார்களே தவிர, நம்மைப் பற்றிச் சிந்திக்கவும் நேரம் இருப்பதில்லை. நாம் என்னமோ சொல்கிறோம். கேட்டால் நாமும் கூட ஒத்துழைப்போம். இனிமேலாவது புத்தி வருமோ? என்னமோ? யார் கண்டார்கள்? சொல்ல வேண்டியதைச் சொன்னோம். புத்தியுள்ள பிள்ளையாய் இருந்தால் பிழைக்கட்டும்! நம் கடமையை நிறைவேற்ற நாம் எப்பொழுதும் தயங்குவதில்லை. பொதுவுடைமைக் கனவு காண்பதை விடுத்து, இனிமேலாவது உண்மையான பொதுவுடைமை எங்கிருக்கிறதென்பதைக் கண்டு பிடியுங்கள்! தொழிலாளி—முதலாளி என்ற சொற்களையே அர்த்தமில்லாத சொல்லாக்கப் பாடுபடுங்கள்!

போகவேண்டும், உதைவாங்கவேண்டும். இனியாவது அங்கு சென்றால் இம்மாதிரிதான் கைமேல் பலன் கிடைக்கும் என்று உணர்வீர்களா? மூடப் பழக்கங்களை ஒழிப்பீர்களா?

எல்லாமவன் செயல்!

கொல்லுதல் திருடுதல்

யார் செயல்?

தூத்துக்குடிமாநாடு

இன்னும் சிலகுறிப்புகள்.

★

மாநாட்டின் தலைவாசல் அரண்மனை முகப்பைப்போல் காட்சி அளிக்கும்.

மாநாட்டின் கொடி ஏற்றுவது மின்சாரத்தால். கொடி உயர்த்துபவர் தனது சொற்பொழிவை முடித்துவிட்டு, தன்பக்கத்திலிருக்கும் சுவிட்சை தட்டிவிட்டால் போதும். மாநாட்டின் முன்நாட்டியிருக்கும் நீண்ட கம்பத்தில் கொடி தானாகவே ஏறிக் கம்பீரமாகப் பறக்கும்.

ஊர்வலத்திற்கு 6செதை பாண்டு வாத்தியங்கள், 18குதிரைகள், ஒரு யானை ஆகியவைகள் உண்டு.

மாநாட்டின் நிகழ்ச்சி நேரங்களில் தாய்மார்கள் குழந்தைகளுடன் வீற்றிருந்து, அக்குழந்தைகள் இடை நேரத்தில் அழஆரம்பித்துவிட்டால், அக் குழந்தைகளை எடுப்பதற்கு பெண் தொண்டர்கள் உண்டு. அத்துடன் மாநாட்டு கொட்டகைக்குள் பெண்கள் வீற்றிருக்கும் பக்கத்திலுள்ள ஒரு அறையில் குழந்தைகளுக்குத் தொட்டில்களும், பாலும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

செயலாளர்.

மாகாண மாநாட்டின் டிக்கட் பற்றிய விபரம்

தூத்துக்குடியில் நடைபெறப்போகிற மாகாண மாநாட்டின் டிக்கட்டுகளை அனுப்பும்படி பல தோழர்கள் கடிதம் எழுதியவண்ணம் இருக்கிறார்கள். அவர்களுக்கும் இதர தோழர்களுக்கும் இதையே பதிலாகத் தருகிறேன்.

அதாவது மாநாட்டின் டிக்கட்டுகளை, எந்த இடத்திற்கும் அனுப்பி வைப்பது கிடையாது. டிக்கட் தேவையுள்ளோர் முன்பணம் அனுப்பினால் அவர்களுக்கு உடன் டிக்கட் அனுப்பி வைக்கப்படும். வரவேற்புகுழு ரூபாய் 5. பிரதிநிதி, பார்வையாளர் கட்டணம் ரூபாய் 1. பெண்களுக்கு மட்டும் இலவசம். ஆனால், பெண்களுக்கும் இரண்டு நாட்களுக்கும் இரண்டுவிதமான பாஸ் கொடுக்கப்படும். இந்த இரண்டு நாள் பாசையும் கொண்டு வந்தால் தான் இரவு நாடகத்திற்கும் பெண்களை இலவசமாக அனுமதிக்கப்படும்.

டிக்கட் தேவையுள்ளோர் முன்பணத்துடன் எழுதுக.

செயலாளர்.

ரோஜா முத்தையா
ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

[4ம் பக்கத் தொடர்ச்சி]

தோழர் ஜெயப்பிரகாஷ் போன்ற வர்கள் தங்களின் பரந்த அனுப வத்திற்கு முன் இவைகளைப் பொடி (?) விஷயமாக நினைத்து அவைகளைக் கவனிக்காமல் விட்டு விட்டது தான். அதன் பலன் தான் இன்று வந்து முட்டுகிறது.

“சோசியலிஸ்டுகள், காங்கரசிலி ருந்து வெளியேறட்டும்; இன்றேல் வெளியேற்றப் படுவார்கள்” என். கிறார் உள்நாட்டு மந்திரியும், இந்துமத வெறியரும், பணமூட் டைகளின் பாதுகாப்பாளரும், இந் தியாவின் ஹிட்லருமான பட்டேல் துரை அவர்கள்.

“சோசியலிஸ்டுகள் காங்கரசிலி ருந்து வெளியேறக்கூடாது; அவர் கள் அதற்குள்ளேயே இருந்து கொண்டே தங்களின் கொள்கை களை நாட்டிலே பரப்ப வேண்டும் என்கிறார், இந்தியாவின் முடி சூடா மன்னர், என்று பிரதிநிதி என காந்தியாரால் போற்றப்பட்ட ஜவஹர்லால்நேரு.

இவர்கள் இருவரும் காங்கரசி னுள் புதிதாகப் புகுந்தவர்களா? இல்லையே. பின் ஒருவர் சோசிய லிஸ்டுகளை ஆதரிக்கவும், மற்றவர் எதிர்க்கவும் காரணம் என்ன? அன்று, கட்சியின் அமைப்பு முறையிலே கவனம் செலுத்தா மல், புலியையும் பசுவையும் ஒரு துறையில் நீர் அருந்தவிடும் சர்க் கஸ் காரனைப்போல், முற்போக் காளர்களையும் பிற்போக்காளர் களையும் ஒரேபடியில், ஒரே கொடியின் கீழ் நின்று போரிடச் செய்ததின் பலன் இது. எனவே படேலைப் போன்ற மத வெறியர் கள் காங்கரசிலே இன்றுதான் புகுந்தனர் என்று நினைப்பது, அறியாமையின் பிரதிபலிப்பு. காங் கரசை வெறுத்து விட்டு வெளியே றுவதாகக் கூறும் இவர்கள் சோசி யலிஸ்ட் கட்சியைத்தான் ஒரு ஒழுங்கோடு வகுப்பார்களா எனப் பார்த்தால், அதுவும் ஏமாற்றத் தைத்தான் அளிக்கிறது. அவன் கிடக்கிறான் குடிகாரன் எனக்கு இரண்டு மொந்தைபோடு! என்ப தைப்போல, இன்றையக் காங்கர சை வகுப்பு வாதிகள் கைப்பற்றிக் கொண்டனர், எனவே இனி அத னால் மறைந்த மகாத்மாவின் கன வை நனவாக்கமுடியாது; அவ ரின் புனித ஆத்மாவைச் சாந்தி யடையச் செய்ய முடியாது. அவரின் இறுதி லட்சியமான ராமராஜ்யத்தை—அதாவது சோசியலிஸராஜ்யத்தை இந் தியாவிலே ஸ்தாபிக்கச் செய்ய முடியாது என்று காங்கரசின் மேல் குற்றம் சாட்டி வெளியே வரும் இவர்கள், மதவெறியின் உருவங்க ளாகிய ரமணரிஷிகளையும், அர விந்தர்களையும் தங்கள் கட்சிக் குத் தொண்டாற்ற அழைப்பதின் அர்த்தம் என்னவோ தெரிய வில்லை.

இன்றையத்தொழிலாளர் உலக மானது, தங்களது வாழ்க்கையைச் சுதந்தரமுள்ளதாக்கிக் கொள்ள வேண்டுமானால் மூன்று வித எதி ரிகளோடு அவர்கள் போராடி வெற்றி பெறவேண்டியதாயிருக்கி றது. முதலாவது, அரசியல் துறை யிலேயும் இரண்டாவது பொரு ளாதாரத் துறையிலேயும் மூன்றாவது சமுதாயத் துறையி லேயும் அவர்கள் விடுதலை பெற்று முன்னேற வேண்டியதாயிருக்கி றது. அரசியலிலே அவர்கள் விடு தலை பெற முயற்சிக்கும்போது இந் நாட்டின் அதிகார வர்க்கமா கிய வெள்ளையனை எதிர்க்க வேண்டியதாயிருக்கிறது. அப்பொ ழுது வெடிமருந்தையும் விஷப் புகையையும், 144, தடியடி, துப்பாக் கிப் பிரயோகம் முதலியவைகளை யும் சமாளிக்க வேண்டியதாயிருக் கிறது. இரண்டாவதாகச் சமுதா யத் துறையிலே முன்னேற முயற் சிக்கும்போது, இந்நாட்டின் புரோ கிதக் கூட்டமாகிய ஆரியக்கூட் டத்தை எதிர்க்கவேண்டியதாயி ருக்கிறது. அப்பொழுது விதி, கர்மம், வினை, பாபம், புண்ணி யம், நரகம், மோக்ஷம் முதலிய சதிச்சொற்களைச் சாய்க்கவேண் டியதாயிருக்கிறது. மூன்றாவதாகப் பொருளாதாரத் துறையிலே முன் னேற முயற்சிக்கும்போது இந் நாட்டின் முதலாளித்துவத்தின் இரும்புத் தூண்களாகிய வட நாட்டு டாட்டாக்களையும், பிர் லாக்களையும், தலல்களையும், மேத்தாக்களையும் எதிர்க்கவேண் டியதாயிருக்கிறது. அப்பொழுது நான் செய்த புண்ணியம் நான் இன்பமனுபவிக்கிறேன்; நீ செய்த பாவம் நீ துன்பம் அனுபவிக்கி றாய் என்பது போன்ற செல்ல ரித்த சொல்லடுக்குகளை வெட் டிச் சாய்க்க வேண்டியதாயிருக் கிறது.

எனவே இன்றையத் தொழிலா ளர் உலகத்தைத் தாக்குவோர் மூவர், ஆனால் தாக்கப்படுவோர் ஒருவர்—அதாவது தொழிலாளர் கள். இம்மூவரிடமுமிருந்தும் பூர ணவிடுதலை அடைந்தால் தான் தொழிலாளர் உலகம் பரிபூரண சுதந்தரம் அடைந்தது என்று பொருள். இம்மூவர் ஆட்சியும் ஒழிக்கப்பட்ட நாடுதான் கம்யூனி சமோ அல்லது சோசியலிசமோ பரவ ஏற்றநாடு என்று பெயர். இம்மூவரில் ஒருவர் ஆதிக்கம் இருந்தாலும் அந்த நாடும்சரி, அல் லது அந்த நாட்டு மக்களும்சரி, இன்னும் போராட்டத்திற்குத்தயா ராக இருக்கவேண்டியவர்கள் என்று தான் பொருள்.

இவைகளைப் பற்றி யெல்லாம் நம் சோசியலிஸ்டுகள் சிந்தித்தார் களோ என்னவோ தெரியவில்லை. வெள்ளையர் ஆட்சியோ இன்னும் பரிபூரணமாக அகலவில்லை. சென்னை மாகாணத்துக்கு கவர் னர் நியமிக்கவேண்டுமானால், அதற்கு வெள்ளை மன்னரின் கையெழுத்து இல்லாமல் முடி யாது. அப்படியிருக்க வெள்ளை யர் ஆட்சி அஸ்தமித்து விட்டது, எனவே இனி சோசியலிசத்தைப் பரப்பப் போகிறோம் என்று கூப் பாடு போடுவதின் அர்த்தமென்ன?

அவர்கள் கூற்றுப்படியே வெள் ளையர் ஆட்சி அழிந்து விட்டது என்று வைத்துக் கொண்டாலும், இனி அடுத்த போராட்டம் சமு தாயத்துறையைப் பற்றியது. அதா வது சமுதாயத்தைச் சீர்திருத்த முயலவேண்டும். புரோகிதர்களின் புல்லுருவித் தனங்களைப் பொசுக் கமுயலவேண்டும். அவ்விதம் புரோ கிதக் கூட்டம் பொசுக்கப் பட்ட பின், அதன்மேல் முதலாளித்து வத்தை அழித்துப் புதைத்து, அதற்குமேல் தொழிலாளர்களின் உழைப்பைக் கொண்டு சோசிய லிச அமைப்பை ஏற்படுத்த வேண்டுமேயொழிய, இரண்டாவ தாக முதலாளித்துவத்தை ஒழிக்க முற்படுவது பைத்தியக்காரன் செயல். அதுவும் பிறவி முதலாளி களாகிய ரமண ரிஷிகளையும், அர விந்தர்களையும் கொண்டு அமைக்க முயற்சிப்பது முட்டாள் தனம்கூட. “நான்” என்ற இரண்டு எழுத்துக்கே இன்னும் அவர்கள் பொருள் காணமுடியாமல் திணறிக் கொண்டிருக்கும்போது ‘சோசியலி சம்’ என்ற ஆறு எழுத்துக்கு இவர்கள் அர்த்தம் புரிந்து கொண்டு தொண்டாற்ற வருவது எப்பொழுதோ தெரியவில்லை.

இவைகளை யெல்லாம் நாம்

யோசிக்கும்போது உண்மையிலேயே இவர்களுக்கு சோசியலிஸத்தில் பற்றுதல் இல்லை, ஏதோ இருப்பதற்கு விதம் விதமான ஸ்டண்ட் வேலைகள் செய்து கொண்டிருக்கலாம் என்று கூப்பாடு போட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்பது தெளிவாகத் தெரிகிறது. இவர்களின் மேல் ஏற்பட்ட இந்தச் சந்தேகம் நாளுக்கு நாள் ஊர்ஜிதம் ஆகிறதேயொழிய குறையவில்லை.

தோழர் ஜெயப்பிரகாஷ் அவர்கள் சென்னையில் வந்து முதன் முதல் இறங்கியபொழுது கையில் ராட்டினத்தோடு இறங்கினாராம். எப்படியிருக்கிறது பாருங்கள். வந்ததோ ஆகாய விமானத்தில்-அதாவது விஞ்ஞானத்தின் துணை கொண்டு. ஆனால் கையில் கொண்டு வந்ததோ நம் பாட்டிகள் காலத்து கைராட்டினம். பேசுவதோ எதிர்காலத்திலே பரவ வேண்டிய சோசியலிசத்தைப் பற்றி. எப்படியிருக்கிறது பாருங்கள்.

இவர் தென்னாட்டிற்கு எதற்காக இறக்குமதி செய்யப்பட்டிருக்கிறார் என்பதை அவர் மதுரை மாநாட்டிலே பேசிய பேச்சுகள் நன்றாக விளக்கிக் காட்டும். அவரின் கனவு நனவாகுமா என்பது சந்தேகம்தான். பார்ப்பனீயம் ஒழிக எனக்கோஷிக்கக் கூடாது எனக்கூறி, அழிந்து கொண்டுவரும் இன்றையப்பார்ப்பனீயத்திற்கு வக்காலத்து வாங்கி அதைப் பிழைக்க வைக்க மகேந்திரஜாலங்கள் புரிந்துவரும் அவர், விரைவில் அதே பார்ப்பனீயம் மண்ணோடு மண்ணாக மக்கி மடியப் போவதைக் காணப்போகிறார்.

அவரை இறக்குமதி செய்துவிட்டதால் இனி இந்த நாட்டிலே பார்ப்பன எதிர்ப்புணர்ச்சியை அழித்துவிட்டோம் எனஎண்ணி விழாக்கொண்டாடும், இன்றையத் தென்னாட்டுப் பார்ப்பனர்கள் விரைவில் நியாயத்தின் முன் மண்டியிட்டுத் தலை வணங்கப் போகிறார்கள்.

உள்ளந்தரத்திலே இன்றைய அதிகார வர்க்கத்தினரோடு உறவு கொண்டு, வெளியே சோசியலிசம் பேசித்திரியும் இந்த அரசியல் ஸ்டண்ட் பேர்வழிகளின் குட்டுகள் வெட்ட வெளிச்சமாக நீண்டநாள் ஆகப்போவதில்லை.

ஒழிக ஆரிய சோசியலிசம்!
பரவுக உண்மை சோசியலிசம்!

(3ம் பக்கத் தொடர்ச்சி)

றோம். எங்கள் கூட்டத்திற்கு உணர்ச்சி வரவில்லை. தன்காடு பிறர்காடு காணவில்லை. தன்னுள்ளே தெய்வமிருக்கிறது. அதைத்தானே வணங்கலாம் என்கிற சாஸ்திர நிச்சயம் தெரிந்த படித்தவனும், பண்டிதனும் பார்ப்பான் காலில் தெய்வமிருக்கிறதென்று நினைத்துப் பணம் வைத்து இப்பவும் வணங்குகிறான். பார்ப்பார்கள் முன்பு காலில் ஒன்றும் போட்டுக் கொள்ளுவதில்லை. இப்பொழுது சிலிப்பர், பூட்ஸ்காலில்போட்டுக்கொள்ளுகிறார்கள். அந்தக் காலில் கூட தெய்வங்கள் இனியும் எத்தனை நாளைக்கு வாழ்ந்து வருமோ? பார்ப்பாரத்தாசிமக்களான எங்கள் பணக்காரர்கள், இதை எப்பொழுது தெரிவார்களோ? அதுவரையிலும் கூச்சல் போட்டுத்தானே ஆகவேண்டும். தடியடிக் கூட்டத்தாரிடமிருந்து அபாயம் நேரிடக் கூடுமென்பதையும் அறிவோம். வேட்டைநாய்களின் வசத்தில், மண்ணுலகம் சதாகாலத்திற்கும் விட்டுவைக்கத் தக்கதன்று என்ற நினைப்பு மனிதனுக்கு மீண்டும் வரும் என்று ரவீந்திரநாத்தாகூர் கூறியதையும் நாங்கள் நம்புகிறோம்.

சில வருஷங்களுக்கு முன் துவார் என்கிற ஊரில் பார்ப்பார்கள் சபை கூடினார்கள். கல்கத்தா காலேஜ் இங்கிலீஸ் உபாத்தியாயர் பாலக்காட்டு அனந்த கிருஷ்ணய்யர் சபைத் தலைவர். கூட்டமும் அதிகம். பெரிய சாஸ்திரிகளும் வந்திருந்தார்கள். அவர்கள் பேச்சுகளெல்லாம் முடிந்த உடன் சாஸ்திர யுக்தமாகவும், அனுபோகமாகவும். இப்பொழுது வைசியக்ஷத்திரிய ஜாதி இல்லை, பிராமண சூத்திரஜாதி இரண்டு தானிருக்கின்றன என்று தீர்மானம் பண்ணினார்கள். இந்தத் தீர்மானத்திற்கு எண்ணமும் அர்த்தமுமென்ன? டாக்டர் சுப்பராயனிடமே கேட்கிறேன், அவரே சொல்லட்டும்! சங்கராச்சாரியிலிருந்து பல தொழில் செய்யும் பார்ப்பார்களெல்லாம் பிராமணர்கள். சைவ மடாதிபதிகளிலிருந்து ஓதுவார், தேசிகர், நாயுடு, பிள்ளை, முதலியார் எல்லாத் தமிழக் கூட்டமும் சூத்திரர்கள். மிட்டா, ஜெமீன், டாக்டர் சுப்பராயனிலிருந்து அவர் நாய்க்காரன் வரையிலும் சூத்திரன். பிராமணர்களென்றால் பிர்மா, தேவர்கள், ரிஷிகள், பூசுரர்கள், வேதவித்துக்கள், ஞானிகள் என்கிற பெயரும், அத்தன்மையுமுடையவர்கள். சூத்திரர்களென்றால் பிராமணத் தாசிமக்கள், வைப்பாட்டி மக்கள், அடிமை, ஒழுக்கமில்லாதவன், கண்டதைப்புசிப்போன், அறிவற்றவன் என்கிற பெயரும் இத்தன்மையுமுடையவர்கள். இவைகளை நினைத்துக் கொண்ட ஆணவமும், அகங்காரமுமல்லவா அந்தத்தீர்மானம்? இந்தத் தீர்மானம் செய்யச் சாஸ்திர நுட்பம் சொல்லுகிறதாம்! அவர்கள் சாஸ்திர நுட்பம் அவர்கள் மட்டுமிருக்கவேண்டும்! மற்றவர்களையும் கேவலமாக அவர்கள் சாஸ்திர யுக்தம் சொல்லுவது எவ்வளவு அக்கிரமம்? மற்ற சமூகங்களிலிருக்கும்படித்தவனையும், பண்டிதனையும் மான உணர்ச்சியில்லாத மடையர்கள் என்கிற அனுபோக எண்ணமல்லவா இப்பேர்ப்பட்ட தீர்மானத்தை உண்டாக்கியது? திராவிடப் பெருங்குடி மக்களுக்கு இதில் கவலையில்லை. அவர்கள் இழிவைப்பற்றி அவர்களுக்கு எண்ணமில்லை. அவர்களை வசப்படுத்திக் கையாளாக வைத்துக்கொள்ளப் பார்ப்பாருக்குத் தெரியும். பார்ப்பான் சொல்லும் சூத்திரக் கூட்டத்திலும், படித்தவன், பண்டிதன், ஆராய்ச்சிப் பண்டிதன், சாட்சி வாரம் தவறாமல் காட்டும் பண்டிதன், ஆரியமும் திராவிடமும் ஒன்றாய்க் கலந்துவிட்டதென்று சொல்லும் தேசியப் பண்டிதன் எல்லோருமிருக்கிறார்கள். இவர்களும் ஒரு கூட்டம் போட்டு அந்தத் தீர்மானத்தைக் குற்றம் சொன்னார்களா? கண்டித்தார்களா? இல்லையே. சுயமரியாதைக்காரர்கள் கல்வி அறிவில்லாதவர்கள் என்று எங்களைக் காட்டிக்கொடுக்கத்தான் இவர்கள் கல்வி உபயோகப்படுமோ? காட்ட வேண்டிய இடத்தில் கல்வித்திறத்தையும், பேச்சு வன்மையையும் காட்டவேண்டும். அங்கும் நாங்கள்தான் மாரடித்தோம், கண்டித்துப் பல எழுதினோம். அங்கேயும் எங்கள் பேரில்தான் பண்டிதர்கள் தங்கள் திறமையைக்காட்டினார்கள். நாங்கள் பூசுரர்கள், எங்கள் பாதத்தில் பூசிக்கும் சூத்திரர்கள் நீங்கள். நாங்கள் வேதம் பாலிப்பவர்கள், ஞானிகள். நீங்கள் மடையர்கள், அறிவற்றவர்கள் என்று சொல்லித் தீர்மானம் பண்ணினவர்களிடம் பண்டிதர்கள் போகவேயில்லை. அவர்கள் படிப்பின் தன்மை அவ்வளவே.

பிராமணன் தன் கலையை விட்டு, மற்றவர்கள் கலையைப்படித்தால் பிரஷ்டன். பிராமண ஜாதியிலிருந்து தள்ளப்படுவான் என்பது சாஸ்திர யுக்தமட்டுமல்ல, வேத ஸ்மிருதியின் விதியுமாகும். பிராமணன், க்ஷத்திரியன், வைசியன், சூத்திரன் என்கிற நாலும் சேர்ந்தால் வருணாஸ்ரமமாகிறது. இதில் க்ஷத்திரியன், வைசியனை எடுத்துவிட்டால் பிராமணன், சூத்திரன் இரண்டில் வருணாஸ்ரமமிருக்குமா? உடலிருந்து மார்பும் வயிறும் போய் விட்டால், தலையிலும் காலிலும் உடலிருக்குமா? இருக்கும், இருக்கவேண்டுமென்று தான் பார்ப்பார்கள் சொல்லுகிறார்கள். சூத்திர மடையர்கள் எதைச் சொன்னாலும் கேட்பார்கள் யென்பதைத் தெரிந்தவர்கள்.

சுப்பராயன் டாக்டர் அவர்கள் விடு

வெளிவந்து விட்டது!

தோழர்களே! நாட்டின் நெருக்கடியான கட்டத்தில் தூத்துக்குடி மாநாடு வருகிறது. அதுபோது நம்முன் நிற்கும் பிரச்னை என்ன! பிரிந்த தலைவர்கள் ஒன்றுகூட வேண்டும்; திராவிடத்தின் சிறைச் சாலைகள் திறக்கவேண்டும்! இவைகளை விளக்கவே,

‘அழியட்டுமே திராவிடம்!’

[துறையூர் நாராயணன் எழுதியது.]

விலை அணா எட்டு. ஏஜண்டுகளுக்கு 25% கமிஷன் உண்டு.

:தேவைக்கு எழுதுக:

புரட்சிப் பதிப்பகம், துறையூர், திருச்சி ஜில்லா.

த்த அறிக்கையின் தலைப்பில் துவேஷ மனப்பான்மை வேண்டாமென்றிருக்கிறது. துவார் நாட்டுப் பார்ப்பார் தீர்மானத்தைத் தெரிந்திருந்தாரானால், துவேஷ மனப்பான்மை எங்கிருந்துண்டாகிறது என்பது தெரியும். டாக்டர் பிராமணத் துவேஷம் கூடாதென்கிறார். அந்தத் தீர்மானத்தில் எங்கிருந்து பிராமணத் துவேஷமுண்டாகிறதென்பதும் தெரியும். பார்ப்பார்கள் பேரில் பொறாமை கூடாதென்கிறார். எங்களுக்கென்ன பொறாமை? செல்வம் எல்லோரிடமும் வரும் போகும். அதை ஏமாற்றி அபகரிப்பதும், எங்களை இழிவாக நினைப்பதும் கூடாதென்கிறோமே அல்லாது பொறாமை ஒன்றுமேயில்லை.

தமது புத்தி தீட்சண்ணியத்தாலும், தேசபக்தியாலும் நாட்டின் விடுதலைக்கு வெகுவாகப் பாடுபட்ட சிலரின் வகுப்பிற்கு விரோதமாகத் துவேஷப் பிரசாரம் செய்வது தவறாம். அறிவுத் துறையில் நம்மைப் பார்க்கிலும் முன்னேற்றமடைந்திருக்கும் வகுப்பாரிடம், துவேஷம் காட்டாமல் நாம் பார்த்துக்கொள்ளவேண்டும் என்கிற வாக்கியங்கள் டாக்டர் அறிக்கையில் காணப்படுகின்றன. அறிவுத்துறையில் முன்னேற்றமடைந்த ஜாதியாரிடம் துவேஷம் காட்டாமல் நாம் பார்த்துக் கொள்ளவேண்டுமென்று சொல்லுகிறார். நாம் என்பது யாரோ? நாம் என்பது இவராகவிருந்தால் அறிவுத் துறையில் முன்னேற்றமடைந்த வகுப்பாருக்கும், சில பொறுப்புகளும் நேர் வழிகளுமிருக்கின்றன என்பதையும் டாக்டர் தெரிந்து கொள்ளவேண்டும்! பார்ப்பார்களுக்கும் சொல்லவேண்டும். ஆங்கிலேயர்களில் சிலர், தங்கள் புத்தி தீட்சண்ணியத்தாலும், தேசாபிமானத்தாலும் இந்தியாவை ஏகாதிபத்தியத்தில் சேர்த்தார்கள். ஒரே பொறுப்பின் கீழ்க்கொண்டு வந்தார்கள். இந்தியாவில் எத்தனையோ நன்மை தீமைகளைச் செய்தார்கள். அவர்கள் எல்லோரையும் சேர்த்துத்தான் குற்றம் சொன்னோம். அவர்களும் நியாயமுணர்ந்து நம் தேசப் பொறுப்புகளை நம்மிடம் விட்டு விட்டார்கள். பார்ப்பார்களும், சமயங்களின் அதிகாரங்களைப் பொதுப் படுத்தி விட்டால் குற்றமேன் சொல்லுகிறார்கள்? தங்கள் விதிகளே சகத்தின் விதிகளென்று துவார் மகாநாட்டுத் தீர்மானம் போலப் போட்டுக்கொண்டேயிருந்தால், துவேஷமுண்டாகாமலிருக்குமா? மற்ற நாடுகளில் எல்லோரும் சமமாக அனுபவித்துவரும் உரிமைகளை, நமது நாட்டில் மட்டும் பார்ப்பார்கள் சிறப்புரிமை, பிறப்புரிமை, சாஸ்திர உரிமை, சனாதன உரிமை, கடவுள் கொடுத்த உரிமை என்கிற பெயர்களில் சமயத்திற்குத் தகுந்த பெயர் சூட்டி, மானுஷிகத்தை அவமானப்படுத்திக் கொண்டிருப்பது நியாயமா? இந்த அசம்பாவிதத்திற்கு நெடுங்காலம் இடம் கொடுத்து வந்தது போல, இனியும் கொடுக்க முடியுமா? இதற்கு நெறிப்படி ஒரு தீர்ப்பு இராஜாங்கமே செய்யவேண்டும்.

இந்தியாவை இங்கிலாண்டோடு சேர்த்து அரசாட்சி செய்தார்கள் பல வைசிராய்கள். அவர்கள் இருந்த நாற்காலியில் இராஜகோபாலாச்சாரி உட்கார்வதற்கு என்ன யோக்யதையிருக்கிறதென்று ஆங்கிலேயரும் கேட்பதில்லை; நாங்களும் சொல்லுவதில்லை. இராஜகோபாலாச்சாரியார் உட்கார்ந்த நாற்காலியில் ஓமந்தூராருக்கு உட்கார என்ன யோக்கியதை இருக்கிறதென்று சில பார்ப்பார்கள் கேட்கிறார்களாம்! இதற்கு உள்ளது உள்ளபடி பதில் சொல்ல எங்களுக்குத் தெரியும். நாங்கள் சொன்னால் பிராமணத்துவேஷி என்றும் வகுப்புவாதி என்றும் டாக்டர் அவர்களே சொல்லுவார். ஆனதால் அந்தப் பார்ப்பார்களுக்கு அவரே பதில் சொல்லட்டும்!

நமது நாட்டில் மேதாவிகளென்றும், அறிவுடையவர்களென்றும் பெயர் எடுத்தவர்களில் யார் பார்ப்பனர்களைக் குற்றம் சொல்லாதவர்கள்? சொன்னவைகள் அனைத்தும் புஸ்தகங்களிலிருக்கின்றன. தனக்குத்தானே நாயகனாக விருக்கும் உரிமை, எல்லா மனித உரிமைகளிலும் பெரியது. ஆனால் நமது நாட்டில் சாஸ்திரங்களாலும், பழமொழிகளாலும், கிரியை சடங்குகளாலும் மறுக்கப்பட்டிருக்கிறது. தெய்வத்தின் பெயர் சொல்லி மனிதனை மனிதன் அவமதிக்கும்படி செய்து விட்டார்கள். பிரம்ஞானமும், விரிந்த வாழ்வும், சூத்திரனுக்குக் கிடையாதென்று முன்பு விதி போட்டார்கள். பிராமணன் தனது ஸ்தானத்தை முன் ஜாக்கிரதையாலே கெட்டிப்படுத்திக் கொண்டான். புறத்தை ஒடுக்கும் முன்பு ஜனங்களின் அறிவை ஒடுக்கி விட்டான். அறிவின் வேர்களைச் சூத்திரனிடமிருந்து பறித்துவிட்டபடியால், சூத்திரன் ஸ்வந்திர காரியம் செய்யச் சாத்தியப் படவில்லை. பிறகு சூத்திரனுடைய தலை பிராமணனுடைய பாததூளியிலே ஈடுபட்டிருப்பதைக் காக்க வேறு சிரமம் வேண்டியதில்லையாயிற்று. இது ரவீந்திரநாத் தாகூர் சொன்னது. பெரிய கவி என்றும், பண்டிதர் என்றும், உலகமெல்லாம் புகழப்பட்டு, உலகப் பரிசான நோபிள் பரிசு பெற்று, மகாத்மா காந்தியாராலும் புகழப்பட்ட ரவீந்தரநாத் சொன்னதேயல்லாமல், சுயமரியாதை வளர்க்கும் ஈரோட்டுப் பெரியார் சொன்னதல்ல. இப்படியே சுவாமி விவேகானந்தர், இராமதீர்த்தர், ராமச்சந்திரடெட் இன்னும் பல பெரியவர்களும் சொல்லியிருக்கிறார்கள். மகாத்மா காந்தி வகுப்புத் துவேஷம் கூடாதென்றார். அதையே எல்லோரும் சொல்லுகிறார்கள். அவர்கள் சொல்லும் வகுப்புத் துவேஷம் மகமதியர்கள்—இந்துக்களைப் பற்றியது. தென்னாட்டு வகுப்புத் துவேஷம் வேறு. அதற்கும் இதற்கும் சம்பந்தமில்லை. அடுத்த வியாசத்தில் அதைப் பார்ப்போம்.

★

மறைவு.

திராவிடர் கழகத் தொண்டர் தோழர் எஸ். எஸ். மணியவர்கள் தமது இளம் வயதில் (24 வயது) மனைவியையும், மைந்தனையும் பரிதவிக்கச் செய்து நிமோனியா ஜுரத்தால் 5—4—48-ம் நாள் திருச்சி தேவதானத்தில் இயற்கை எய்தினார்.

* *

திண்டுக்கல் நகர திராவிடர் கழகச் செயலாளர் தோழர் எ. எஸ். மருதை நாயகம் அவர்கள் மகன் அங்குராசன் அவர்கள் 8—4—48-ம் நாள் இயற்கை எய்தினார்.

வகுப்பை ஒழித்தால் துவேஷமும் தொலையும்.

★ வெளியேறுவீர்! ★

"கோபி வேங்கடம்"

குவியல் முறையில் பண்டங்களை உற்பத்தி செய்து, தேவையுள்ள இடங்களுக்கு அதனை வாரிச்சென்று, வரையறையற்ற இலாபத்துக்கு விற்று, பண ரூபத்தில் உழைப்பாளிகளின் இரத்தத்தை உறிஞ்சுவதே முதலாளித்துவத்தின் நீதியாகும். இந்த முதலாளித்துவ முறைக்கு ஒரு கேடும் வராமல் பாதுகாப்பது தான், இன்றைய அரசாங்கத்தின் வேலை.

ஆட்சியாளர்கள் தேசபக்தர்களாக இருக்கலாம்! தியாகிகளாகவும் இருக்கலாம்! அவர்கள் காட்டும் புதிய உலகம் ஏழைகளின் ராஜ்யமாகவும் இருக்கலாம்! அவர்கள் தீட்டும் திட்டம், "உழைப்பவனுக்கே உடைமை" என்ற தத்துவத்தை உள்ளடக்கியதாகவும் இருக்கலாம்! என்றாலும், நடைமுறை, இன்றுள்ள ஆட்சியானது முதலாளித்துவ கோட்டைக்கு அஸ்திவாரமாகவே அமைந்துள்ளதென்பதை நமக்கு நிரூபித்துக்காட்டி விட்டது!

உதாரணமாக உணவுப்பிரச்னையை எடுத்துக்கொள்ளலாம்.

தேவைக்கேற்ற அளவு உற்பத்தி இல்லை. சாதாரண காலத்திலேயே, உணவுக்கு வெளிநாட்டுஇறக்குமதியை எதிர்பார்த்துக் கொண்டிருந்த நமக்கு, யுத்த காலத்தில் ஏற்பட்ட கஷ்டங்களைப் பற்றிக் கூறவேண்டியதில்லை, எனவே கட்டுப்பாடு அமுலுக்குவந்தது.

முதலாளித்துவம் தன்னுடைய வேலையைச் செய்தது. கள்ளமார்க்கட் பிறந்தது.

உணவுப் பொருள் மக்களுக்கு நேர்மையான முறையில் விநியோகிக்கப்படுவதை இந்தக் கள்ளமார்க்கட்காளான்கள் முறியடித்தன. (இது சர்க்காரே கூறிய திருவாக்கு. இட்டுக்கட்டியதல்ல) ஏராளமான உணவுப் பொருள் சர்க்காருக்குத் தெரியாமல் பதுக்கி வைக்கப்பட்டு, கள்ளமார்க்கட்டில் கொள்ளை இலாபத்துக்கு விற்கப்பட்டது.

இந்த அக்ரமத்தைத் தடுக்க ஆட்சியாளர்களால் இயலவில்லை என்று கூறிவிட முடியுமா? நாட்டிலே உள்ள மாற்றுக்கட்சிகளின் மீது காட்டுகிற கண்டிப்பில், பத்தில் ஒரு பங்காவது இந்தக் கள்ளமார்க்கட்காரர்களின் மீது காட்டப்பட்டிருக்குமானால் கள்ளமார்க்கட் தோன்றி இருக்குமா?

அடக்குமுறையை வீச ஆட்சியாளர்களுக்குத் தெரியும். அதிகாரம் அவர்கள் கையில் இருக்கிறது. என்றபோதிலும், கள்ள மார்க்கட்காரர்களின் மீது இவற்றை ஏவ முடியவில்லை. காரணம் என்ன வென்றால், மாற்றுக் கட்சிக்காரர்களைப்போல, கள்ளமார்க்கட்காரர்கள் காங்கரசுக்கு வெளியே இருந்து கொண்டு வேலை செய்யவில்லை. அவர்கள் காங்கரசுக்கு உள்ளேயே இருந்தனர். கதர் போட்ட கனவான்களாக மட்டுமல்ல, சட்டசபை உறுப்பினர்களாகவும் கூட, கள்ளமார்க்கட்காரர்கள் காட்சி தந்தனர்.

இந்த விசித்திரமான நிலைமைக்குப் பரிகாரம் தேட ஆட்சியாளர்களால் முடியவில்லை. ஆகவே கட்டுப்பாட்டை ரத்துச் செய்து விட்டு உட்கார்ந்து கொண்டனர். இஷ்டப்படி கொள்ளையடிக்கக் கள்ளமார்க்கட்காரர்களுக்கு லைசென்ஸ் கொடுத்து விட்டனர்.

இப்போது நிலைமை என்ன?

எங்கு பார்த்தாலும் ஏழைகளின் கூக்குரல் கேட்கிறது. பணக்காரர்களும், பட்டாதாரர்களும் பகிரங்கமாகப் பகற்கொள்ளையடிக்கப் புறப்பட்டு விட்டனர். இல்லாத மக்கள் துடிக்கின்றனர்.

உழைக்கும் மக்கள் உணவுக்கு மன்றாடி உள்ளம் துடிப்பதை ஊராள்வோர் உணராமலிருக்கலாம்! ஆனால், அவர்களை அந்த உன்னதமான இடத்திலே உட்கார வைத்த ஊழியர்கள் உணராமலிருக்க முடியுமா? காங்கரஸ் ஊழியர்கள் பல இடங்களிலே சர்க்காருக்கெதிரான கிளர்ச்சிகளை நடத்தத் தொடங்கி விட்டனர்.

கோபிசெட்டிப்பாளையம் உபரி தாலூக்கா. அப்படி இருந்தும் இங்குள்ள மக்களுக்கு உணவுப் பொருள் கிடைக்கவில்லை. இந்த ஊர் மிராசுதாரர்களில் பெரும்பாலோர் காங்கரஸ்காரர்களாகவே இருந்தும், ஒருவராவது கைவசமுள்ள நெல்லை நியாய விலைக்கு விற்க முன்வரவில்லை. அறுவடையான ஒருமாத காலத்தில், மொத்த உற்பத்தியில் 80 சதவிகிதத்துக்கு மேற்பட்ட உணவுப் பொருள் வெளி இடங்களுக்கு லாரிகளின் மூலம் கொண்டு செல்லப்பட்டு விட்டது.

மக்கள் பட்டினியால் மாளநேரிடும் என்று அஞ்ச வேண்டிய நிலை ஏற்பட்டதும், டவுன் காங்கரஸ் காரியதரிசி "உணவு வேண்டும்" என்று கோஷமிட்டுக் கொண்டு உண்ணா விரதம் தொடங்கினார். (14-3-48) அதிகாரிகள் மனம் வைத்து, "நியாய விலை டெப்போ" ஏற்படுத்துவதாக வாக்களித்து அவரது உண்ணா விரதத்தை நிறுத்தி இருக்கிறார்கள்.

காங்கிரஸ் ஆட்சி நடக்கிறது. காங்கரஸ் போர்வைக்குள்ளிருந்து கொண்டு கள்ளமார்க்கெட் பேர்வழிகள் ஏழைகளைக் கசக்கிப் பிழிகிறார்கள். இதற்கு எதிராக, காங்கரஸ்காரர்களே கிளர்ச்சி செய்கிறார்கள்-உண்ணாவிரதம் இருக்கிறார்கள்.

காங்கரஸ்காரர்கள் ஆளுகின்றனர், அவர்களை ஆட்சிப்பீடத்திலே அமர்த்துவதற்கு ஓட்டளித்த தொழிலாளர்கள் ஸ்டிரைக் செய்கின்றனர். "அவர்கள் வேலைக்குச் செல்லக் கூடாது" என்று அறிக்கை விடுகிறார் காங்கரஸ் எம். எல். ஏ. தோழர் ஆர். குப்புசாமி.

இந்த நிலை எத்தனை நாளைக்கு நீடிக்க முடியும்?

முதலாளித்துவத்துக்கு முன்னோடும் பிள்ளையாக இருந்து கொண்டு, பணசக்திக்கு ஜனசக்தியை அடிமைப்படுத்த முனைந்துள்ள இந்த ஆட்சி முறையை, இன்னமும் அனுமதிக்க வேண்டுமா? காங்கரசிலிருக்கும் இளைஞர்களே! உள்ளே இருந்து கொண்டு கிளர்ச்சி புரியும் தோழர்களே! எண்ணிப் பாருங்கள்! முதலாளித்துவத்தை முறியடிக்க வேண்டுமானால் காங்கரசை விட்டு வெளியேறுங்கள்.

நாதன் கம்பெனி லிமிடெட்.

புத்தக விலைப் பட்டியல்.

தலைவர் பெரியார்.

தத்துவவிளக்கம்	0	12	0
வெளியேறு	0	6	0
சமதர்ம உபன்யாசம்	0	4	0
இலங்கை உபன்யாசம்	0	3	0
இராமாயணப் பாத்திரங்கள்	0	3	0
மேல்நாடும், கீழ்நாடும்	0	3	0
திருச்சிப் பிரசங்கம்	0	2	0
காங்கிரஸ் திராவிடனுக்கு விண்ணப்பம்	0	1	0
தமிழ் இசை-நடிப்புக் கலைகள்	0	1	0
ஜஸ்டிஸ் கட்சிக்குக் கிராக்கி, புதுகட்சியா?	0	1	0
உழைப்பாளிக்கு ஏன் இவ்வுலகம் இல்லை?	0	3	0
இன இழிவு ஒழிய இஸ்லாமே நன் மருந்து!	0	2	0
இதிகாசங்கள் புகட்டும் நீதி	0	2	0
உண்மைத் தொழிலாளி யார்?	0	2	0

கிடைக்குமிடம்:-
கச்சேரி வீதி, ஈரோடு.
94 C. பிராட்வே, சென்னை.

Edited, Printed and Published by N. Karivaradaswamy at the Tamilian Press 42, Cutchery street, ERODE